பக்கங்கள் பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 05 திங்கட்கிழமை (17-02-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:83

## கிளாலியில் சிப்பாய் பலியான சம்பவம் குறித்து முழு விசாரணை

### இராணுவத் தளபதி உத்தரவு

கொழும்பு,பெப்.17

கிளாலிப் பகுதியில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காணாமற் போனதை யடுத்து இந்தச் சம்பவம் குறித்து பூரண விசாரணை நடத்துமாறு யாழ். இராணுவத் தலைமையகத்தை இராணுவத் தளபதி பணித்திருக்கிறார்.

முகமாலை முன்னரங்கப் பகுதியிலுள்ள கிளாலி முகாமில் சேவையாற்றிய கே.ஆர்.ஏ.தர்மதாச என்னும் இந்த இராணுவச் சிப்பாய் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து சுடப்பட்டு மரணமானார் என்பது தெரிந்ததே.

இந்த இராணுவ வீரர் தொடர்பாக படைத்தரப்பில் தெரிவிக்கப்படுவதாவது:-

கடந்த 14ஆம் திகதி காலை நடைபெற்ற உடற்பயிற்சியில் அந்த வீரர் பங்குபற்றவில்லை. உடற்பயிற்சி நடைபெற்றவேளை அவர் முகாமுக்குள் இருந்தார் எனக் கூறப்பட்டது.

கடந்த 13ஆம் திகதி இரவு மற்றோர் இராணுவ வீரருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்து அவர் மன வேதனையுடன் இருந்தார் எனவும் கூறப்படுகிறது.

பின்னர் ஆராய்ந்து பார்த்தபோது,

(14ஆம் பக்கம் பார்க்க)

## பலியான சிப்பாயின் சடலம் படையினரிடம் ஒப்படைப்பு

### பிரேத பரிசோதனை கொழும்பில்

யாழ்ப்பாணம்,பெப்.17

கிளாலியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஊடுருவிய வேளை சூட்டுக்குப் பலியான படைச் சிப்பாயின் சடலம் நேற்றுப் பிற்பகல் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

உயிரிழந்த சிப்பாயின் சடலத்தை விடுதலைப் புலிகள் நேற்று நண்பகல் முகமாலையில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதி நிதிகளிடம் கையளித்தனர்.

புலிகளின் பளை முனைத்தளபதி லெப்.கேணல் அறிவு, சடலத்தை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதியிடம் கையளித்தார்.

முகமாலைப் பகுதியில் உள்ள புலிகளின் செயலகம் ஒன்றில் கையளிப்பு வைபவம் நடைபெற்றது.

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு, பின்

(14ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு நெருக்கடி ஏற்பட்டால் சமாளிக்க இந்திய, அமெரிக்க உதவி

## விசேட திட்டம் ஒன்றை வகுத்து அரசு நடைமுறைப்படுத்தும்

கொழும்பு,பெப்ரவரி17

**நாட்டில் திடீரென பாதுகாப்பற்ற ஒரு நிலைமை உருவாகுமேயானால் அமெரிக்காவினதும் இந்தியாவினதும் ஒத்துழைப்புடன் விரிவான பாதுகாப்புத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக பாதுகாப்பு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

விசேட பாதுகாப்புத் திட்டத்தினை அமுல்செய்வதற்காக பாதுகாப்புப் படையினருக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன - என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்திட்டத்துக்காக விசேடமாகத் தெரிவுசெய்யப்பட்ட பாதுகாப்புப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## இடுப்புப்பட்டி தொடர்பாக புதிய நடைமுறை அமுலுக்கு

இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் புலிகள் பட்டி அணிந்து செல்வது தொடர்பாகக் கண்காணிப்புக்குழு புது நடைமுறையை வகுத்திருக்கிறது.

கடந்த 12ஆம் திகதி பட்டி அணிந்து சென்ற விடுதலைப் புலிகள் இயக்கப் பெண் போராளிகள் 8 பேர் மானிப்பாயில் இராணுவத்தினரால் தாக்கப்பட்டதும் பிரச்சினை எழுந்தது. அதை அடுத்தே பட்டிதொடர்பான புது நடைமுறை அமுலுக்கு வருகிறது.

புதிய நடைமுறைப்படி -

- இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் பிரவேசிக்கும் விடுதலைப் புலிகள் தாமாகவே தமது இராணுவச் சீருடை வகையானபட்டியைக் கழற்றிவிட வேண்டும்.
- இந்த நடைமுறையைப் பின்பற்றாத புலிகள் உள்ளே செல்ல அரச படையினரால் அனுமதிக்கப்படமாட்டார்கள்.
- புலிகள் இந்த நடைமுறையைப் பின்பற்ற தவறும் பட்சத்தில் அரச படையினர் உடனே கண்காணிப்புக் குழுவின் உதவியை நாடுவார்கள். இந்த வாய்ப்பு புலிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.
- கண்காணிப்புக் குழுவினர், அரச படைகள், புலிகள் ஆகிய இரு தரப்பினருக்கும் நடைமுறைகளைக் கண்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவினர் சடலத்தைப் பார்வையிட்டனர்

கொழும்பு,பெப்.17

கிளாலியில் சூட்டுக்கு இலக்காகிப் பலியான இராணுவச்சிப்பாயின் சடலம் சீருடையுடன் இருந்தது. சடலத்துடன் கிரனேற் ஒன்றும் காணப்பட்டது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு இதனை ஊர்ஜிதம் செய்திருக்கிறது.

சடலத்தைக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் பார்வையிட்டிருக்கின்றனர்.

"போர்நிறுத்த உடன்படிக்கையின்படி ஒரு தரப்பு மற்றைய தரப்பின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிக்குள் சீருடையுடனோ, ஆயுதத்துடனோ செல்வது உடன்படிக்கையை மீறுகின்ற செயல் தான். அது தடைசெய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சிப்பாய் புலிகளின் பகுதிக்குள் சென்றிருந்தால் அது போர்நிறுத்த மீறல்தான்" - என்று கண்காணிப்புக்குழு பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

## புலிகளின் நிலைக்குள் சிப்பாய்கள் பிரவேசித்தமை மோசமான மீறல்!

### வடமுனைக் கட்டளைத் தளபதி தீபன் தெரிவிப்பு

கிளிநொச்சி,பெப்.17

கிளாலியில் எமது பெண் போராளிகளின் காவல் நிலைகளுக்குள் இராணுவத்தினர் ஆயுதங்களுடன் பிரவேசித்தமை மிக மோசமான ஒரு போர் நிறுத்த மீறலாகும்.

இவ்வாறு கண்டித்து கருத்து வெளியிட்டிருக்கிறார் புலிகளின் வடமுனைக் கட்டளைத்தளபதி கேணல் தீபன்.

கிளாலி சம்பவம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

பெண் போராளிகளின் காப்பரணுக்குள் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பிரவேசித்த சம்பவமானது ஓர் அப்பட்டமான போர்நிறுத்த மீறலாகும். நாம் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி சூனியப்பிரதேசத்திற்குள்ளே கூட ஒரு பகுதியினரின் அனுமதி இன்றி மறுபகுதியினர் பிரவேசிக்க முடியாது. நிலைமை இவ்வாறு இருக்க எந்தவிதமான அனுமதியுமின்றி எமது பெண் போராளிகளின் காவல் நிலைகளுக்குள் இராணுவத்தினர் ஆயுதங்களுடன் சென்றது மிகமோசமான போர்நிறுத்த மீறலாகும்.



இவர்கள் வந்த முறைகளையும் தடயங்களையும் ஆராயும்போது இவர்கள் எமது நிலைகள் தொடர்பான வேவுப்பணியில் ஈடுபடவே வந்துள்ள

(14ஆம் பக்கம் பார்க்க)

## கொட்டாஞ்சேனைப் பகுதியில் கொள்ளையர்கள் அட்டகாசம்!

### பட்டப்பகலில் வீடு புகுந்து களவு

கொழும்பு - கொட்டாஞ்சேனை, பிக்கறிங்ஸ் றோட்டிலுள்ள தமிழ் வீடொன்றில் நேற்றுமுன்தினம் பட்டப்பகலில் கொள்ளையர் சிலர் புகுந்து 5 லட்சத்திற்கும் மேலான மதிப்புள்ள நகைகள், உடைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

பொலீஸார் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது குறித்து அவர்கள் அசமந்தப் போக்கிலேயே செயற்படுகின்றனர்.

இது குறித்து கொழும்பு நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசனுக்கு அறிவிக்கப்பட்டது. அவர் பொலீஸ் மா அதிபருடன் தொடர்புகொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுள்ளார்.

தொடர்ந்து இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாத வண்ணம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கலாமென ஆலோசிப்பதற்கு கொழும்பு வட்டாரத்தைச் சேர்ந்த சகல பொலீஸ் நிலையங்களின் உயர் அதிகாரிகளின் கூட்டமொன்று எதிர் வரும் வியாழன் அல்லது வெள்ளிக் கிழமை நடைபெறும். (ஐ)

## ஊடகவியலாளர் சங்கம் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.17

மானிப்பாயில் கடந்த புதனன்று ஊடகவியலாளர்கள் படையினரால் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு கண்டனமும் ஆட்சேபமும் தெரிவித்து யாழ்ப்பாணம் ஊடகவியலாளர் சங்கம் இன்று காலை எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தவிருக்கிறது.

யாழ்.செயலகத்தினுள் அமைந்திருக்கும் தகவல் திணைக்களத்தின் அலுவலகம் முன்பாக இந்தப் போராட்டம் நடைபெறும்.

மானிப்பாயில் பெண் போராளிகள் தாக்கப்பட்ட சம்பவம் பற்றி தகவல் சேகரிக்கச் சென்ற 'தினக்குரல்' படப்பிடிப்பாளர் உட்பட ஊடகவியலாளர்கள் மூவர் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்தது தெரிந்ததே.

## பத்திரிகைகள் மீது சீற்றம் இந்தியத் தூதுவர் சென்

### இ.தொ.கா.மாநாட்டில்

கொழும்பு,பெப்.17

இலங்கைத் தமிழ் பத்திரிகைகள் மீது சீறிவிழுந்தார் இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் நிருபம் சென். பத்திரிகைகளுக்கு எழுத்து மூலம் பதில் அளித்து நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை என்று கூறிய இந்தியத் தூதுவர், தனது செயற்பாட்டின் மூலம் பதிலடி கொடுக்கப்போவதாகவும் குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம் கண்டியில் நடைபெற்ற இ.தொ.காவின் 33ஆவது தேசிய மாநாட்டில் இரண்டாவது நாள் நிகழ்ச்சிகளில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இப்படிக் குறிப்பிட்டார்.

இ.தொ.கா.தலைவர் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தொடர்ந்து பேசிய இந்தியத் தூதுவர் மேலும் கூறியதாவது:-

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்










## இங்கிலாந்து வென்றது

ஈஸ்ற் லண்டன்,பெப்.17

கிரிக்கெட் உலகக் கிண்ண போட்டியின் 'ஏ' பிரிவில் நெதர்லாந்து - இங்கிலாந்து அணிகளிடையே நேற்று நடந்த ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுக்களால் வென்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து நெதர்லாந்தை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தது. 50 ஓவர்

(13ஆம் பக்கம் பார்க்க)

## நமீபியா மீண்டும் தோல்வி

கிம்பர்லி,பெப்.17

உலகக்கிண்ணபோட்டியின் 'ஏ' பிரிவில் நடந்த மற்றோர் ஆட்டத்தில் பாகிஸ்தான் - நமீபியா அணிகள் மோதின. 171 ஓட்டங்களால் பாகிஸ்

(13ஆம் பக்கம் பார்க்க)



நமீபியாவை தகர்த்தெறிந்த மகிழ்ச்சியில் வஸீம்.

## கென்யா வெற்றி

கேப்டவுண்,பெப்.17

கிரிக்கெட் உலகக்கிண்ண போட்டியில் 'பி' பிரிவில் கென்யா - கனடா அணிகளிடையே கேப்டவுன் நியூலாண்ட்ஸ் மைதானத்தில் நடந்த ஆட்டத்தில் கென்ய அணி 4 விக்கெட்டுக்களால் வென்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற கனடா முதலில் துடுப்பெடுத்தாடியது. 49ஓவர்களில் கனடா சகல விக்கெட்டுக்களையும் இழந்து, 197 ஓட்டங்களை பெற்றது. கனேடிய வீரர் பில்சிலீவ் 71 ஓட்டங்களை பெற்றார். கென்ய வீரர் ஒடுயா 28 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கென்யா 48.3 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 198 ஓட்டங்களை பெற்றது; 4 விக்கெட்டுக்களால் வென்றது. ஒடுயா ஆட்டநாயகனானார். (ம)

# தலைமையில் இருந்து விலகப்போகின்றேன்!

### நாஸர் ஹுசைன் தெரிவிப்பு



கேப்டவுண்,பெப்.17

உலகக்கிண்ண போட்டியின் பின்னர் இங்கிலாந்து அணித்தலைவர் பதவியில் இருந்து விலகப்போவதாக நாஸர் ஹுசைன் தெரிவித்துள்ளார். ஐ.சி.சி. நிர்வாகிகளின் நடத்தை காரணமாகத்தான் இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் கூறினார். ஸிம்பாப்வேயில் நடைபெற விருந்த ஆட்டத்தை வேறு இடத்துக்கு மாற்ற முடியாது என ஐ.சி.சி. அறிவித்த பின்னர் நாஸர் ஹுசைன் இதனைத் தெரிவித்தார்.

இங்கிலாந்து வீரர்களின் பாதுகாப்பை ஐ.சி.சி. கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை என ஹுசைன் குற்றஞ்சாட்டினார்.

பொதுவாகவே நிர்வாகிகள் மீதான நம்பிக்கை எனக்குப் போய்விட்டது. ஸிம்பாப்வே விவகாரத்தில் நான் தனிமைப் படுத்தப்பட்டுவிட்டேன். கிரிக்கெட்டும் என் சக வீரர்களுமே இந்தத் தொடரில் நான் இன்னும் நிலைத்திருப்பதற்கு காரணம்.

- இவ்வாறு மேலும் தெரிவித்தார் ஹுசைன். (ம)

SHARP Action of the day



பந்துக்குத் தாவும் நியூஸிலாந்து விக்கெட்காப்பாளர்

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ் Browns
BROWNS ELECTORINICS




# ஆவேசப் பந்து வீச்சுக்கள் நன்கு திட்டமிடப்பட்டவை

### ரிக்கி பொன்டிங் தெரிவிப்பு

கேப்டவுண்,பெப்.17

இந்தியாவுக்கு எதிரானபோட்டியில் மேற்கொள்ளப்பட்ட ஆவேசமான பந்துவீச்சுக்கள் நன்கு திட்டமிடப்பட்டவை. என ஆஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொனடிங் கூறியுள்ளார்.

பிரெட்லி, மெக்ராத், ஜிலெஸ்பி, ஆகியோர் இந்தியவீரர்களை தாக்கும் விதமாக பந்து வீசினர். ஏறத்தாழ அனைத்து இந்திய வீரர்களும் துடுப்பெடுத்தாட வந்தவுடன் தலையை நோக்கி எகிறும் பந்துகள் வீசப்பட்டன.

இது குறித்து ஆட்டத்தின் பின் ஆஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் கூறியதாவது:-

"குறும் பந்துகளை (Short balls) வீசுவதென முன்கூட்டி திட்டமிடப்பட்டிருந்தது. இது நன்கு பலனளித்தது."

இந்திய வீரர்கள் நியூஸிலாந்து சுற்றுலாவின் போது இத்தகைய பந்து வீச்சுக்களில் திணறினர். அதேவிதமாகப் பந்து வீசுவதற்கு நாமும் திட்டமிட்டோம். எந்தவொரு துடுப்பாட்ட வீரரும் தம்மை நிலைநிறுத்தி கொள்வதற்கு இடமளிக்காதிருப்பதற்கேற்ப தந்திரோபாயம் வகுக்கப்பட்டது. இந்த நடவடிக்கை காரணமாக ஓட்டங்கள் பெறுவதும் குறைந்தது. இதனால் இருவழிகளில் எமக்கு பலன் கிடைத்தது". என்றார். (13ஆம் பக்கம் பார்க்க)

# கங்குலி வீட்டின் எதிரே ரசிகர்கள் ஆர்ப்பாட்டம்

புதுடில்லி,பெப்.17

சனிக்கிழமை அன்று நடந்த ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா மிகமோசமான தோல்வியை சந்தித்ததை அடுத்து ஆத்திரமடைந்த இந்திய கிரிக்கெட் ரசிகர்கள் கொல்கத்தாவில் உள்ள கங்குலியின் வீட்டின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.கங்குலிக்கு எதிராக கோஷங்களையும் எழுப்பினர்.

கிரிக்கெட்டில் இருந்து கங்குலி விலக வேண்டும் என்றும் அவர்கள் குரல் எழுப்பினர். கங்குலியின் உருவப்படத்தையும் அவர்கள் எரித்தனர். இதனை அடுத்து கங்குலியின் வீட்டின் பாதுகாப்பு பல மடங்காக அதிகரிக்கப்பட்டது.

இதேவேளை, கொல்கத்தாவில் உள்ள உள்ளூர் கிரிக்கெட்கழக உறுப்பினர்கள் இந்திய அணியின் தோல்வியை எதிர்த்து அணிக்கு இறுதி ஊர்வலம் நடத்தினர்.

இந்திய அணியை இறந்ததாக உருவகப்படுத்தி அதற்கு பாடை அமைத்து இறுதிஊர்வலம் நடத்தப்பட்டது. இறுதிஊர்வலத்தில் இடம் பெறும் அனைத்துச் சடங்குகளும் செய்யப்பட்டன. பின்னர் இந்திய அணியைத் தகனஞ்செய்தனர். (ம)

# ஏன் இப்படி என்று புரியவேயில்லை!

### கவலைப்படுகிறார் கங்குலி



செஞ்சூரியன்,பெப்.17

"ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் 125 ஓட்டங்களுக்குள் எப்படி ஆட்டமிழந்தோம் என்பது எனக்குப் புரியவில்லை. நாமேன இப்படி ஆடுகின்றோம் என்றும் எனக்குத் தெரியவில்லை."

- இவ்வாறு பரிதாபமாகப் பேட்டியளித்துள்ளார் இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலி. ஆஸியுடனான ஆட்டத்தில் தோல்வியுற்ற பின் செய்தியாளர்களிடம் பேசும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

7 சிறந்த துடுப்பாளர்களை கொண்ட இந்திய அணி இப்படிப்பட்ட தோல்விகளில் இருந்து மீளுமா? என்று கேள்வியெழுப்பப்பட்டதற்கு பதில் கூறும் போதே கங்குலி (13ஆம் பக்கம் பார்க்க)

## கென்யா செல்லாது நியூஸிலாந்து

கென்ய தலைநகர் நைரோபியில் எதிர்வரும் 21ஆம் திகதி அந்த அணிக்கு எதிராக நடைபெறவுள்ள ஆட்டத்தில் பங்கேற்கப் போவதில்லை என்று நியூஸிலாந்து கிரிக்கெட் சபை திட்டவட்டமாக அறிவித்துவிட்டது. தென்னாபிரிக்காவுடனான ஆட்டத்தில் வெற்றி பெறுவதற்கு முன்னரே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுவிட்டது.

தமது கிரிக்கெட் வீரர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நியூஸிலாந்து கிரிக்கெட் சபைத்தலைவர் மார்ட்டின் ஸ்நேடன் நேற்று தெரிவித்தார். "வீரர்களின் பாதுகாப்பே எமக்கு முக்கியம். எதிர்வரும் 21 ஆம் திகதி நைரோபியில் நடக்கும் ஆட்டத்தில் நியூஸிலாந்து பங்குபற்றாது" - என்றார் அவர் திட்டவட்டமாக. (ம)

## மீளுமா இந்தியா

நேற்றுமுன்தினம் செஞ்சூரியனில் 'சுப்பர் ஸ்போர்ட்ஸ் பார்க்' மைதானத்தில் நடந்தது இந்திய - ஆஸ்திரேலியா இடையிலான ஆட்டம், மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஆட்டம். நட்சத்திர துடுப்பாளர் வரிசையைக் கொண்டிருந்த இந்தியா, ஆஸ்திரேலியாவுக்கு பெரும் சவாலாக இருக்கும் என்று எண்ணப்பட்டது. வழமைபோன்று எதிர்பார்ப்புக்குரிய தருணத்தில் கோட்டை விட்டது இந்தியா. ரசிகர்களின் கோபத்துக்கு அளவேயில்லை. அப்படி ஒரு மோசமான தோல்வியை இந்தியா சந்தித்தது. சவாலாக இருக்கக்கூடிய அணிகள் என்று இதுவரை ஆரூடம் கூறப்பட்ட அணிகளை எல்லாம் ஊதித்தள்ளி, தாம்தான் கிரிக்கெட் ஜாம்பவான்கள் என்று மார்தட்டி நிற்கின்றது ஆஸ்திரேலியா. ஏற்றுத் தானே ஆகவேண்டும். இந்தியாவின் ஆட்டம் குறித்து அந்நாட்டுப் பத்திரிகைகள் கிழி கிழி என்று கிழித்து வைத்துள்ளன.

தென்னாபிரிக்க ஆடுகளங்களில் முதலில் துடுப்பெடுத்தாடுபவர்கள் ஓட்டங்களைக் குவிக்கமுடியும் என்று கூறப்பட்டது. இதுவரை நடந்த பல ஆட்டங்கள் அதனை நிரூபித்தன. அரைவாசி ஆட்டத்திற்குப் பின்னர்

(13ஆம் பக்கம் பார்க்க)









போர் மேகம் சூழும் வேளையில்

# ஈராக்கியக் குடியிருப்புகள் மீது அமெரிக்க விமானங்கள் தாக்கு!

பக்தாத்,பெப்.17

பேரழிவு ஆயுதங்களை ஈராக் தயாரித்து வருவதாகக்கூறி அந்த நாட்டின மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா தயாராகி வருகிறது. இதற்காக வளைகுடா பகுதியில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ராணுவத்தினரையும் போர்க் கப்பல்களையும் அமெரிக்கா குவித்து வைத்துள்ளது. ஐ.நா.வின் ஒப்புதல் இன்றி ஈராக் மீது தாக்குதல் நடத்துவோம் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் அறிவித்திருக்கிறார். ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இல்லை என்று ஆயுத சோதனைக்குழுவினர் தெரிவித்த அறிக்கையும் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு திருப்தி அளிக்கவில்லை.

இந்நிலையில் ஈராக்கின் தெற்கு பகுதியில் அமெரிக்க பிரிட்டிஷ் விமானங்கள் தொடர்ந்து குண்டு வீசின. தெற்குப் பகுதியில் சிறுபான்மை ஷீட்டி இன மக்களை பாதுகாக்க அந்தப் பகுதியில் ஈராக்கின் விமானங்கள் பறக்கவும், ராணுவ முகாம்கள் அமைக்கவும் தடை விதிக்கப்பட்ட பகுதியில் அமெரிக்க விமானங்கள் பறந்து சென்று கண்காணித்து வருகின்றன.

இந்தக் கண்காணிப்பு விமானங்களை ஈராக் தாக்கி வருவதாகக் கூறியும், தடையை மீறி வருவதாக கூறி அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் இந்தப் பகுதியில் குண்டு வீசி வருகின்றன.

இந்நிலையிலேயே பாஸ்ரா நகரில் அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் சரமாரியாக குண்டுகளை வீசின.

இதில் அந்த பகுதியில் உள்ள ஏராளமான குடியிருப்புகள் இடிந்து தரைமட்டமானதாக ஈராக் கூறியிருக்கிறது.

தகவல் தொடர்பு கோபுரங்களும் இடிந்து தரை மட்டமானது. இந்தத் தாக்குதலில் எத்தனை பேர் பலியானார்கள் என்ற விவரம் வெளியிடப்படவில்லை. ஆனால், இது பற்றி அமெரிக்கா கூறும்போது பொது மக்களையோ, குடியிருப்புகளையோ நாங்கள் குறிவைத்துத் தாக்கவில்லை. ராணுவ முகாம்கள் மற்றும் ஆயுத இடங்களைத்தான் தாக்கியுள்ளோம். தாக்குதல் நடத்திய விமானங்கள் பத்திரமாக திரும்பி வந்து விட்டன என்று தெரிவித்துள்ளது. (ஒ)

உதய அரங்கில்

## உத்தேச ஈராக் போரில் பங்கேற்கவுள்ள

# அமெரிக்க கடற்படை அணியின் கட்டளை அதிகாரி பதவி நீக்கம்!

## பெண் ஊழியருடன் தகாத உறவு வைத்திருந்தார்

லண்டன்,பெப்.17

ஈராக் மீது நடத்தத் திட்டமிட்டுள்ள போரில் பங்கேற்கவுள்ள அமெரிக்க கடற்படைப் பிரிவுக்கு தலைமை தாங்கிய அட்மிரல் ஸ்ரீவன் குன்கில், பெண் அதிகாரி ஒருவருடன் தகாத உறவு கொண்டிருந்த குற்றச்சாட்டின் பேரில் பதவி நீக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க கடற்படையின் பாரிய விமானம் தாங்கிக் கப்பலான 'யு.எஸ்.எஸ்.கிற்றஹவாக்கின்" கட்டளை அதிகாரியாக குன்கிள் பொறுப்பு வகித்தார்.

ஜப்பானைத் தளமாகக் கொண்ட அமெரிக்க கடற்படையின் ஏழாவது அணியில் இக்கப்பல் அங்கம் வகிக்கிறது. 10 போர்க்கப்பல்களையும், விமானப்படையணிகள் ஒன்பதையும் இக்கப்பல் கொண்டுள்ளது. ஈராக் மீதான உத்தேச இராணுவ நடவடிக்கையில் பங்கேற்க இக்கப்பல் தற்போது மத்தியதரைக் கடற்பகுதியில் பயணிக்கிறது. இந்த நிலையில் அதன் கட்டளை அதிகாரி பதவி நீக்கப்பட்டதன் பின்னணியில் பாரதூரமான சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கடந்த காலங்களில் உளவாளிகளாக அழகிய பெண்கள் பயன்படுத்தப்பட்டதை சுட்டிக்காட்டும் அவர்கள் அட்மிரல் குன்கிலுடன் தகாத உறவில் ஈடுபட்டதாகக் கூறப்படும் கடற்படைப் பெண் அதிகாரி உளவாளியாக இருக்கலாம் என்று சந்தேகம் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக அமெரிக்க கடற்படைப் பேச்சாளர் கூறுகையில் - அட்மிரல் குன்கில் மீது அமெரிக்க கடற்படை கொண்டிருந்த நம்பிக்கையை இழந்தமையால் அவர் ஜப்பானில் உள்ள அமெரிக்க கடற்படையின் கட்டளை இடும் அதிகாரியாக தற்காலிகமாக நியமிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

ஜப்பானில் 'கிற்றிஹவாக்' முன்னர் தரித்திருந்தவேளை, அக்கப்பலின் மாலுமிகள், ஜப்பானில் கொள்ளை முயற்சி, மோதல்கள், போதைப் பொருள் கடத்தல் போன்றவற்றில் ஈடுபட்டதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதனையடுத்து அக்கப்பலின் தலைமை மாலுமி பதவி நீக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# மகளை அடித்த தாய் மீது அமெரிக்காவில் வழக்கு!

சவுத்பெண்ட்,பெப்.17

கடைக்கு பொருள்களை வாங்கச் சென்றபோது தனது குழந்தையை அடித்து உதைத்த தாய் மீது வழக்குத் தொடரப்பட்டது.

அந்தத் தாயின் பெயர் மேடலின் தூகுத (வயது 26) அமெரிக்காவில் உள்ள இண்டியானா மாநிலத்தைச் சேர்ந்த இவர் தனது 4 வயது மகளுடன் வணிக வளாகம் ஒன்றுக்கு பொருள்களை வாங்கச் சென்றார். கடையில் அவர் தனது மகளை கோபத்துடன் அடித்து உதைத்ததை அங்குள்ள கண்காணிப்பு கமரா படம் பிடித்தது. பின்னர் அந்தக் காட்சி தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பப்பட்டது. சிறுவர்களை மோசமாக அடிப்பது அங்கு சட்டப்படி குற்றமாகும்.

விஷயம் அம்பலத்துக்கு வந்ததும் தான் தவறு செய்ததை மேடலின் தூகுத் ஒப்புக்கொண்டார். தனது மகள் விஷமம் செய்ததால் அடித்ததாக அவர் கூறினார். குற்றத்தை ஒப்புக்கொண்டதால் அவர் சிறைத்தண்டனையில் இருந்து தப்பினார். (ஒ)

## வடகொரியாவிடம் அணுகுண்டு!

நியூயோர்க்,பெப்.17

வடகொரியாவிடம் ஒன்று அல்லது இரண்டு அணுகுண்டுகள் இருக்கக் கூடும் என்று அமெரிக்க உளவு அமைப்பு கருதுவதாகவும், அணுகுண்டு தயாரிப்புக்கான மூலப்பொருள்களை வடகொரியா தொடர்ந்து சேகரித்து வருவதால் இந்த ஆண்டு ஜூன் மாதத்துக்குள் அந்த நாடு மொத்தம் 5 அல்லது 6 அணுகுண்டுகளை தயாரித்து விடமுடியும் என்றும் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் கூறியுள்ளார். (ஒ)

## அமெ.குண்டுவீச்சில் ஆப்கான் சிறுவன் படுகாயம்!

ஆப்கானிஸ்தானில் தலிபான் மற்றும் அல்கெய்டா தீவிரவாதிகளின் நிலைகளைத் தாக்கிவரும் அமெரிக்க விமானங்களின் குண்டு வீச்சில் 8 வயதுச் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்துள்ளான்.

கடந்த ஒரு வாரகாலப்பகுதியில் தமது தாக்குதலில் சிக்கிய பொதுமகன், இச்சிறுவன் ஒருவனே என அமெரிக்கா கூறுகிறது. ஆனால், குறைந்தது 17 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (ஒ)

## அமெரிக்காவுக்கு கடும் எதிர்ப்பு

ஈராக் மீது தாக்குதல் நடத்தும் அமெரிக்காவின் எண்ணத்துக்கு உலகம் முழுவதும் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. வியட்நாம் போருக்குப் பின்னர் அமெரிக்காவுக்கு எதிராகத் தற்போது பாரிய கண்டன ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் உலகநாடுகளின் பிரதான நகரங்களில் இடம்பெற்று வருகின்றன. அப்பேரணிகளின் போது எடுக்கப்பட்ட படங்களில் சிலவற்றை கீழே காணலாம்.







# கொலம்பியத் தீவிரவாதிகள் அமெரிக்கரைக் கொன்றனர்!

பொகோடா,பெப்.17

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் அரசை எதிர்த்துப் போராடி வரும் தீவரவாதிகளை ஒடுக்க அமெரிக்கா உதவி செய்து வருகிறது.

இந்த நிலையில் 4 அமெரிக்கர்கள் மற்றும் ஒரு கொலம்பிய இராணுவ வீரருடன் சென்ற சிறிய அமெரிக்க விமானம் ஒன்று திடீரென என்ஜின் கோளாறு ஏற்பட்டதால் தெற்கு கொலம்பியாவில் தீவரவாதிகள் ஆதிக்கம் மிகுந்த காட்டுப்பகுதியில் அவசரமாகத் தரை இறங்கியது.

அதில் இருந்தவர்களில் ஓர் அமெரிக்கரையும், கொலம்பிய இராணுவ வீரரையும் தீவரவாதிகள் கொன்றுவிட்டனர். மற்றைய மூன்று பேரின் கதி என்ன ஆனது என்று தெரியவில்லை.

இந்தத் தகவலை கொலம்பிய அதிபர் அல்வாரா உரிப் தெரிவித்துள்ளார். (ஒ)

## காஸாவில் இடம்பெற்ற

# குண்டுவெடிப்பில் டாங்கி சிக்கி இஸ்ரேலிய இராணுவத்தினர் பலி!

ஜெருசலேம்,பெப்.17

காஸாவில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற தாக்குதலில் இஸ்ரேலிய இராணுவத்தினர் நால்வர் கொல்லப்பட்டனர்.

வடக்கு காஸாவில் உள்ள டுகிட் யூதக் குடியிருப்புக்கு சமீபமாக வீதியோரத்தில் வெடிகுண்டு புதைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் - இஸ்ரேலிய இராணுவ டாங்கி ஒன்று அவ்விடத்தைக் கடக்கும் போது குண்டு வெடித்ததில் டாங்கி தகர்ந்ததாகவும் - இதில் டாங்கியில் இருந்த இஸ்ரேலிய ராணுவத்தினா நால்வர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் காலை உள்ளூர் நேரப்படி 8.30மணியளவில் இடம்பெற்ற இத்தாக்குதல் சம்பவத்துக்கு பலஸ்தீனத் தீவிரவாத இயக்கமான ஹமாஸ் உரிமை கோரியுள்ளது.

கடந்த வாரம் தொடக்கத்தில் தமது இயக்க உறுப்பினர்கள் இருவர் கொல்லப்பட்டதற்குப் பதிலடியாகவே இத்தாக்குதலை நடத்தியதாகவும் ஹமாஸ் அமைப்புத் தெரிவித்துள்ளது. இத்தாக்குதல் நிகழ்ந்து பல மணித்தியாலங்கள் கடந்த பின்னரே இஸ்ரேலிய இராணுவம் இது குறித்து அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# குளோனிங் ஆடு 'டோலி' விஷஊசி போட்டு கொலை!



லண்டன்,பெப்.17

குளோனிங் மூலம் முதன் முதலாக உருவாக்கப்பட்ட ஆடான டோலி நோய் தாக்கியதால் விஷ ஊசி போட்டு கொல்லப்பட்டது.

ஓர் உயிரினத்தின் கலத்தில் இருந்து மற்றோர் உயிரினத்தை உருவாக்குவதே 'குளோனிங்' முறையாகும். 1997ஆம் ஆண்டு பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் இந்த முறை மூலம் முதன் முதலாக இந்த ஆட்டை உருவாக்கிய போதும் 1997ஆம் ஆண்டு பெப்ரவரி 23ஆம் திகதி தான் வெளி உலகுக்கு அறிமுகப்படுத்தினர்.

டோலி நுரையீரல் கோளாறினால் அவதிப்பட்டு வந்தது. இதற்கு தீவிர சிகிச்சை அளித்தும் பலன் ஏற்படவில்லை. இதைத் தொடர்ந்து அதற்கு விஷ ஊசி போட்டு கொன்றனர்.

குளோனிங் முன்னோடியான டோலி ஆடு இறந்துவிட்டபோதிலும் அதன் உடலை பதப்படுத்தி வைத்திருக்கப்போவதாக இதை உருவாக்கிய ஸ்கொட்லாந்தில் உள்ள ரொஸ்லின் நிறுவனம் அறிவித்துள்ளது (ஒ)

# மூலிகை எரிபொருள் தயாரிப்பதாக ராமர்பிள்ளை மீண்டும் அறிவிப்பு!

சென்னை,பெப்.17

"அடுத்த மாதம் முதல் தினசரி 25 ஆயிரம் லீற்றர் மூலிகை எரிபொருள் உற்பத்தி செய்வேன் என்று தமிழகத்தைச் சேர்ந்த ராமர்பிள்ளை மீண்டும் அறிவித்துள்ளார்.

மூலிகை பெற்றோல் கண்டுபிடித்து இருப்பதாக தமிழகத்தைச் சேர்ந்த ராமர்பிள்ளை சில ஆண்டுகளுக்கு முன்பு அறிவித்தார். அதை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றையும் சென்னையில் அமைத்தார்.

அவரது கண்டுபிடிப்பை விஞ்ஞானிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் ஏமாற்றுவதாக முறைப்பாடு செய்யப்பட்டது. அவர் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது.

இந்த நிலையில் மீண்டும் மூலிகை எரிபொருளை உற்பத்தி செய்யப்போவதாக ராமர்பிள்ளை நேற்றுமுன்தினம் அறிவித்தார். ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்று பொதுமக்கள் அச்சமுறும் நிலையில் ராமர்பிள்ளை இவ்வாறு அறிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம அவர் கூறியதாவது:-

'நான் கண்டுபிடித்து இருப்பது பெற்றோல் அல்ல. மூலிகை எரிபொருள். எனது மூலிகை எரிபொருளுக்கு இந்திய பெற்றோலியத்துறை அமைச்சகமும் 'இந்தியன் ஒயில்' கூட்டுத்தாபனமும் சான்றிதழ் வழங்கியுள்ளன. எரிபொருளைவிட 7 சதவீதம் புகை அளவு குறைவாக மூலிகை எரிபொருளில் உள்ளது என்று சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலவம் பஞ்சு மரங்களை பயன்படுத்தி மூலிகை எரிபொருளைத் தயாரிக்கிறேன். இரு சக்கர வாகனம், 4 சக்கர வாகனங்களில் பயன்படுத்தப்படும் இந்த மூலிகை எரிபொருள், எனது மூலிகை எரிபொருளுக்கு "ஜெரோசின் ஜெற்றோல்" என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த மூலிகை எரிபொருளை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் பொறுப்பை ஆந்திராவைச் சேர்ந்த எம்.எம்.குருப் ஏற்றுள்ளது. சென்னையில் ஒரு மாதத்தில் தினசரி 25 ஆயிரம் லீற்றர் மூலிகை எரிபொருள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைக்கப்படும்.

மராட்டியம், குஜராத் போன்ற மாநிலங்களில் தினசரி 15 லட்சம் லீற்றர் மூலிகை எரிபொருள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைக்கப்படும். வரி உட்பட ஒரு லீற்றரை 17ரூபாவுக்கு (இந்திய மதிப்பில்) விற்கத் திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ)

உ
கணபதி துணை

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



வியாபாரிமூலை J/399
கிராம சேவை அலுவலர்

திருவாளர்

**இராசையா இராசேந்திரன்**

அவர்கள் தரம் 1 இற்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு மகிழ்வுடன் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வியாபாரிமூலை
இன்பர்சிட்டி ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய நிர்வாகப் பொறுப்பாளரும்,
ஆலய பூசகர்களும்.

பருத்தித்துறை

(14584)


## ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதி மட்டு.விஜயம்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி ஜோர்ட் ஆர்.கோணி மட்டக்களப்பு மாவட்டத்தில விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு நேற்றுமுன் தினம் விஜயம் மேற்கொண்டார். வாகரை, கிரான் பகுதிகளுக்கு சென்ற அவர், அங்கு மேற்கொள்ளப்படவேண்டிய அவசர புனர்வாழ்வுப் பணிகள் குறித்து ஆராய்ந்தார். (ம-3)


# மீண்டும் ஆரம்பம்

எமது ஸ்தாபனம் பெப்ரவரி 6ஆம் திகதிமுதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**சிவம் மெடிக்கல் ஸ்ரோர்ஸ் & புத்தகசாலை,**
*சாவகச்சேரி*
(14499) *(அம்பிகா டிஸ்பென்ஸரிக்கு அருகில்).*



# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

17.02.2003

HAPPY BIRTHDAY



## செல்வி பிரணித்தா மோகன்

"நிலா ஒளி" பொலிகண்டியைச் சேர்ந்த
மோகன் - வெண்ணிலா தம்பதிகளின்
**செல்வப் புதல்வி பிரணித்தா**

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (17.02.2003) திங்கட்கிழமை சுவிஸில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். சுவிஸில் வசிக்கும் அன்பு அப்பா, அம்மா, சித்தப்பா, அன்ரி, மாமா, அத்தை மற்றும் உற்றார், உறவினர் லண்டனில் வசிக்கும் மாமாமார் மற்றும் இலங்கையில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, அம்மையா, அம்மம்மா, சித்தப்பாமார், அன்ரிமார், மாமாமார், அத்தைமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் அனைவரும் பிரணித்தாவை பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

வ.சிவஞானம்
(அம்மையா).

*"நிலா ஒளி", பொலிகண்டி.* (14517)



# நிலவு.Com போட்டிப் பரீட்சை

2002 – 2003 கல்வியாண்டுக்கான இறுதிப்பிரிவு வகுப்புக்களுக்கான கட்டணச் சலுகையை தீர்மானிப்பதற்கான பரீட்சை

**பரீட்சைக் கட்டணம் இல்லை**

**விண்ணப்ப முடிவுத் திகதி 23-02-2003**

D-Solve நிலவு.Com COURSES

**Diploma in Web Designing**
HTML
Front Page
COOL 3D
Flash

**Higher Diploma in Web Designing**
Java Script
VB Script
ASP
PHP
MS SQL
My SQL

**Diploma in Hardware Engineering**

**Diploma in Desktop Publishing**
Typing Technic
Adobe PageMaker 7.0
Adobe Photoshop 6.0
Corel Draw 10

**Diploma in Video Editing (Multimedia)**
3D Studio max
Adobe Premier
COOL 3D
Introduction to Maya

பள்ளிகளின் அடிப்படையில் முதல் 10 மாணவர்களுக்கு கட்டணம் எதுவும் இல்லை. ஏனைய மாணவர்களுக்கான கட்டணம் வெட்டுப்புள்ளி அடிப்படையில் 50% வரையிலான கட்டணக் கழிவினைக் கொண்டிருக்கும்.

போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள் கீழ்க்காணும் விபரங்களை உள்ளடக்கி சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை தபால் மூலம் **No 701, K.K.S. Road, Jaffna** என்ற முகவரிக்கு 23-02-2003 ஆந் திகதிக்கு முன்பதாக அனுப்பிவைக்க வேண்டும்.

1.Name :..............................
2.Address :..............................
3.N.I.C.No:..............................
4.பரீட்சைக்கு தோற்ற விரும்பும் இடம்
(யாழ்ப்பாணம்/நெல்லியடி/சாவகச்சேரி)

**IBMS COURSES**

**DIPLOMA IN BUSINESS APPLICATION**
Fundamentals of Information Technology
Ms Word
Ms Excel
Ms Access
Power point
Internet & E-mail

**DIPLOMA IN INFORMATION TECHNOLOGY**
Fundamentals of Information Technology
System Analysis & Design
Data Base Management System
Pascal
Fox Pro
e- Commerce

**ADVANCED PROGRAMMING SPECIALIST**
Programming Technics
Visual Basic
C++
Java Programming

**HIGHER DIPLOMA IN SOFTWARE ENGINEERING**
Programming Technics
System Analysis & Design
Networking
Oracle
C#Sharp
Java Programming

**DIPLOMA IN JAVA PROGRAMMING**
**DIPLOMA IN e-Commerce**

**DREAM SOLUTIONS (PVT) LTD.**
22-1/1, Galle Road,
Dehiwala, Colombo.
T.P: 01- 728491, 0777740413

"The Solutions People"



# மகா சிவராத்திரியை முன்னிட்டு மாபெரும் யாத்திரை

## R.B பஸ் ஆசனப்பதிவகம்

*யாழ்ப்பாணம் R.B. செல்வம்*

## S.S பஸ் ஆசனப்பதிவகம்

கட்டணம் 1500/- மட்டுமே!

*(அரச அங்கீகாரம் பெற்ற ஸ்தாபனம்) தென்மராட்சி, வடமராட்சி S செவ்வேள்.*

யாழ்.- கொழும்பு - திருமலை - கண்டி பஸ்சேவைகள் மற்றும் யாழ். - கொழும்பு விமானப் பயணச் சீட்டுக்கள்

மகா சிவராத்திரியை முன்னிட்டு வடபகுதி மக்களின் நன்மை கருதி எமது ஆசனப்பதிவகத்தினர் இலங்கையில் புகழ்பெற்ற திருத்தலங்களான மன்னார், திருக்கேதீஸ்வரம், திருகோணமலை, திருக்கோணேஸ்வரம் ஆகிய தலங்களுக்கு யாத்திரை ஒன்றை மேற்கொள்ள இருப்பதால் உடனடியாக தங்களின் ஆசனங்களுக்காக முற்கூட்டியே 25.02.2003இற்கு முன்பதாக தமது பெயர், முகவரி என்பவற்றைப் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். யாத்திரை 01.03.2003 அன்று காலை 6.00 மணிக்கு யாழ்.நகரில் இருந்து ஆரம்பமாகி 03.03.2003 அன்று யாழ்.நகரை வந்தடையும்.

**சொற்ப ஆசனங்கள் மட்டும் உள்ளதால் தங்களின் ஆசனப் பதிவுகளுக்கு முந்துங்கள்**

யாழ்நகரில் பதிவுகளுக்கு:
**ஆர்.பி(B) பஸ் ஆசனப்பதிவகம்** — *நவீன சந்தை, வைரவர் கோயில் அருகில், யாழ்ப்பாணம்.* *15, Grand Bazaar, Jaffna.*
**ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்** — 303, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தென்மராட்சியில் பதிவுகளுக்கு:
**கணேசா காட்வெயர்** — (பழைய பிரதேச செயலகம் முன்பாக), சாவகச்சேரி.
**சாய்ராம் மருந்தகம்** — *கண்டி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.*
**விக்கினேஸ்வரா களஞ்சியம்** — *கண்டி வீதி, புத்தூர்ச் சந்தி, மீசாலை.*
**ஸ்ரீ கண்ணகி பல்பொருள் வாணிபம்** — *மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் அருகில், புத்தூர் சந்தி.*
**சங்கரன் வீடியோ சென்ரர்** — *ஐயா கடையடி, கண்டி வீதி, மீசாலை.*

வடமராட்சியில் பதிவுகளுக்கு:
**நெல்லைக் குமரன் ரேடேஸ்** — *பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. T.P.: 021-2263207*

மேலதிக தொடர்புகளுக்கு: **S. செவ்வேள்**
T.P.: 0777 - 174006, 0777 - 737368

(C/26533)

உதயன்

# இந்தியா நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளுமா?

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு கண்டு நிலையான சமாதானத்தையும் பொருளாதார வளத்தையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்தவேண்டும் என்பதில் உலக நாடுகள் பலவும் மிகுந்த அக்கறை காட்டிவருகின்றன.

சமாதான பேச்சுக்களுக்கு அனுசரணை வழங்கி அருந்தொண்டாற்றிவருகிறது நோர்வே. நோர்வேக்கு அடுத்தபடியாக மேற்கு வல்லரசான அமெரிக்காவும் கிழக்கிலுள்ள செல்வந்த நட்பு நாடான ஜப்பானும் காட்டிவரும் ஆர்வமும் வழங்கிவரும் உதவிகளும் குறிப்பிடத்தக்கவை. அண்டை நாடான இந்தியாவின் நிலை தெளிவற்றதாகவே தொடர்ந்து இருந்து வருகிறது. இலங்கையில் யுத்தம் நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, சமாதானத்தை நிலைபெறச் செய்யவேண்டிய தார்மீகப் பொறுப்பு மற்றெல்லா நாடுகளையும் விட இந்தியாவுக்கே அதிகமாக உண்டு.

சமாதான பேச்சுக்கள் வெற்றிபெறவேண்டும்; சமாதானம் மலரவேண்டும்; அதுவே தனது விருப்பம் என்று இந்தியா எப்பொழுதும் சொல்லிவருகிறதே தவிர அதற்கு மேலால் எதையும் உருப்படியாக செய்யவில்லை.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியரும் அரசு - புலிகள் பேச்சுக்களில் புலிகள் குழுத் தலைவருமான அன்ரன் பாலசிங்கத்தின் சுகவீனம் காரணமாக பேச்சுக்களை நல்ல வைத்திய வசதிகள் உள்ள இந்தியாவில் நடத்துவதற்கு இந்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டது. மறுத்துவிட்டது இந்திய அரசு, தாய்லாந்து அரசு தான் கைகொடுத்துதவியது.

தாய்லாந்தில் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர், லண்டனில் வசித்துவரும் அன்ரன் பாலசிங்கம், இந்தியா சென்று அங்கிருந்து வன்னிக்குப் போய் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நேரில் சந்தித்து கலந்தாலோசனை நடத்த விரும்பினார். அதற்கும் இந்தியா இடமளிக்கவில்லை.

அதன் பின்னர்தான் இலங்கை அரசும் நோர்வே அரசும் இணைந்து செய்த ஏற்பாட்டின்படி அன்ரன் பாலசிங்கம் மாலைதீவுக்குச் சென்று அங்கிருந்து கடல் விமானத்தில் இரணைமடு நீர்ப்பரப்பை அடைந்து வன்னிக்குச்சென்று பிரபாகரனுடன் கலந்தாலோசனை நடத்தினார்.

நோர்வே அரசின் ஏற்பாட்டில் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடந்த சமாதான ஆதரவு கூட்டத்தில் உலக நாடுகள் பலவும் கலந்துகொண்டன. அண்டை நாடான இந்தியா மட்டும் கலந்துகொள்ள வில்லை.

அந்த நேரத்திலும் சமாதான முயற்சிகள் வெற்றிபெறவேண்டும் என்று இந்தியா சொல்லிக்கொண்டே இருந்தது.

சமாதான முயற்சி முழு வெற்றி பெறுவதற்கு இந்தியாவின் பங்களிப்பு அவசியமானது என்று பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பினரும் அனுசரணை வழங்கிவரும் நோர்வே அரசினரும் உணர்ந்திருக்கிறார்கள்.

அதனால்தான் நோர்வே அனுசரணையாளர்கள் அவ்வப்போது புதுடில்லி சென்று இந்திய அரசுத் தலைவர்களுக்கு நிலைமையை எடுத்துக் கூறிவருகிறார்கள்.

இலங்கையிலிருந்து அமைச்சர் மிலிந்த மொறகொட அநேகமாக ஒவ்வொரு சுற்றுப்பேச்சின் முடிவிலும் இந்தியா சென்று அரசுத் தலைவர்களுக்கு பேச்சுக்கள் பற்றி விளக்கமளித்து வருகிறார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தாம் பிரதமராகப் பதவி ஏற்றதும் முதலில் விஜயம்செய்த நாடு இந்தியா தான். பேச்சு ஆரம்பமானபின்னரும் இந்தியா சென்று இந்தியத் தலைவர்களுக்கு நிலைமையை விளக்கினார்.

ஆறாவது சுற்றுப்பேச்சு ஜப்பானில் ஆரம்பமாவதற்கு முன்னரும் எதிர்வரும் 27ஆம் திகதி பிரதமர் இந்தியா செல்கிறார். அதுவும் இந்தியத் தலைவர்களுக்கு சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் பற்றி விளக்கத்தான்.


அப்படி இருந்தும் இந்தியாவின் "பட்டும் படாமலும் இருக்கும் நிலை" மாறவில்லை. சமாதான முயற்சியின் வெற்றிக்கு தன்னுடைய பங்களிப்பைச் செய்ய இன்னும் முன்வரவில்லை.


இப்போது அமெரிக்காவும் ஜப்பானும் இந்தியாவை உசுப்பி விடுவதற்கு நேரடியாக இல்லாவிட்டாலும் மறைமுகமாகவேனும் கருத்து வெளியிட்டுள்ளன.

"உபகண்டத்திலும் பொதுவாக உபகண்டம் அமைந்துள்ள பகுதியிலும் சமாதானத்தையும் ஸ்திரத்தன்மையையும் ஏற்படுத்துவதில் இந்திய அரசு முக்கிய பங்கு வகிக்கவேண்டும்" என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் றொனால்ட் றம்ஸ்பீல்ட், முனிச்சில் நடைபெற்ற பாதுகாப்பு மாநாட்டில் தெரிவித்தார்.

ஜப்பான் அரசின் விஷேட பிரதிநிதி யசூசி அகாஷி "ஆசியப் பிராந்தியத்தில் இந்திய நலன் என்பது அந்த நாட்டுக்கு மிகவும் முக்கியமானது. அந்த வகையில் இங்கு அமைதி ஏற்படவேண்டும் என்பதில் இந்தியா அவதானமாக இருக்கிறது" என்றார்.

இனிமேலாவது இந்தியா தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளுமா?





நேற்று யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற சர்வதேச லயன்ஸ் கழகங்களின் பிராந்திய மாநாட்டுக்கு விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும் - நிகழ்வில் கலந்துகொண்ட பேராளர்களை இரண்டாவது படத்திலும் காணலாம். (எ-9)

## 'லயன்ஸ்' பிராந்திய மாநாடு

யாழ்ப்பாணம்,பெப்.17

'லயன்ஸ் கழகங்கள் ஊடாக சமாதானமும் அமைதியும் ஏற்படுத்தல்' என்ற தொனிப்பொருளுடனான சர்வதேச லயன்ஸ் கழகங்களின் பிராந்திய மாநாடு நேற்றுக்காலை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

முன்னாள் பிராந்தியத் தலைவரும், பிராந்திய ஆலோசகருமான லயன் எஸ்.பத்மநாதன் ஆரம்ப மாநாட்டினை நெறிப்படுத்தினார். பிரதமவிருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக பிராந்திய ஆளுநர் லயன் ஓ.றீகன் பிஞ்சியும் -

சிறப்பு விருந்தினராக முன்னாள் ஆளுநர் லயன் கே.தில்லைநாதனும் - கலந்துகொண்டனர்.

முன்னதாக விருந்தினர்கள் அனைவரும் வேம்படி வீதியிலிருந்து நாதஸ்வர வாத்தியங்கள் சகிதம் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இம்மாநாட்டினை சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 9ஆம், 10ஆம் பிராந்தியங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. நிகழ்வில் லயன்ஸ் மற்றும் லியோக் கழகப் பிரதிநிதிகள் எனப பலரும் கலந்துகொண்டனர். (எ-9)

## மறவன்புலோ பாடசாலையின் கூரையும் அகற்றப்பட்டது

தென்மராட்சி,பெப்.17

யுத்தத்தினால் சேதமடைந்த நிலையில் காணப்பட்ட மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய கட்டடங்களில் எஞ்சியிருந்த மரங்களும் அண்மையில் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

படையினரின் அதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் இப்பாடசாலை அமைந்துள்ளதால் மக்கள் செல்வதற்கு இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை.

இப்பகுதியில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு இப்பகுதி குடியிருப்பாளர்கள் அண்மையில் ஆர்ப்பாட்டம் செய்ததையடுத்து, கிராம அலுவலருடன் மக்களை சம்பந்தப்பட்ட பகுதிகளைப் பார்வையிட அனுமதி வழங்கப்பட்டது.

- இவ்வாறு வீடுகளைப் பார்வையிடச் சென்ற மக்களே வித்தியாலய கூரைப்பகுதி அகற்றப்பட்டிருப்பதை கண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே பாடசாலையின் தளபாடங்கள் அனைத்தும் அகற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-117)

## அதிபர், ஆசிரியர்களுக்கு மதிப்பளிப்பது நல்மாணாக்கர்களுக்குரிய இலட்சணம்!

### கோப்பாய் பிரதேச செயலர் அறிவுறுத்து

வலி.கிழக்கு,பெப்.17

*அதிபர், ஆசிரியர்களுக்கு மதிப்பளித்து நடப்பது நல் மாணாக்கர்களுக்குரிய இலட்சணமாகும்.*

- இவ்வாறு தெரிவித்தார் கோப்பாய் பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன்.

கோப்பாய் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. இந்தப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

- பாடசாலை அதிபர் அ.அகிலதாஸ் தலைமையில் மெய்வன்மைப் போட்டி நடைபெற்றது.

பிரதேச செயலர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

முன்னைய காலங்களில் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் பெரியோர்களுக்கு மதிப்பளித்து நடக்கும் பண்பு மாணவ சமூகத்தினால் பேணப்பட்டுவந்தது.

ஆனால், இன்று அந்த நிலை மிகவும் அருகி வருகின்றது. எனவே மாணவ சமுதாயம் பூரணமான வாழ்விற்கு கல்வியே அவசியம் என்பதனை உணர்ந்து, பொறுப்புக்களை உணர்ந்து ஒழுக்கத்துடன் நடந்துகொள்ளவேண்டும்.

கிராமப் புறங்களில் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாது சமூகத்திற்கு ஒவ்வாத செயல்களில் ஈடுபட்டுவரும் நிலையும் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

எனவே பெற்றோர்கள் எப்பாடுபட்டேனும் பிள்ளைகளுக்குக் கல்வி புகட்ட முன்வரவேண்டும். அவர்கள் உடல், உள ரீதியாகவும் மேன்மைபெற விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெறச் செய்யுங்கள். அப்போதுதான் உங்களது பிள்ளைகளின் எதிர்காலம் நன்றாக அமையும். அதேபோல், பிள்ளைகளும் பெற்றோர்களின் கஷ்டத்தினை உணர்ந்து ஒழுங்கான கல்விப் பாதையில் சென்று கல்விகற்று பூரண மனிதர்களாகத் திகழவேண்டும் - என்றார். (எ-180)

### பாதுகாப்பு வலயத்துக்குள் சென்று வந்த

## பிரதேச சபை ஊழியர் விவரத்தை திரட்டிவரும் இராணுவத்தினர்

உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலைக்கு துப்புரவு செய்யச் சென்ற பிரதேச சபை ஊழியர்கள் சம்பந்தமான விவரங்களை இராணுவத்தினர் திரட்டுவதாகக் கூறப்படுகிறது.

கடந்த ஒரு மாத காலமாக தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையின் சுற்றாடல் பகுதி வலி.வடக்கு பிரதேச சபை ஊழியர்கள் 34பேரினால் துப்புரவு செய்யப்பட்டது.

ஏற்கனவே இந்த ஊழியர்கள் வைத்தியசாலை வளாகத்தை துப்புரவு செய்வதற்கான முன் அனுமதி பிரதேச சபை, மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரினால் பெறப்பட்ட பின்னரே இவர்கள் துப்புரவு செய்யும் பணிக்குச் சென்று வந்தனர்.

தற்போது இராணுவத்தினர் ஊழியர்களின் தனிப்பட்ட முகவரிக்கு சென்று ஊழியர்களின் பெற்றோர்கள், சகோதரங்கள் மற்றும் உறவினர்கள் பற்றிய விவரங்களை சேகரித்து வருகின்றனர். இந்த நடவடிக்கையையிட்டு ஊழியர்களிடையே பல்வேறு அச்சங்கள் காணப்படுகின்றன. (ஒ-86)

## மதுவெறியர் அட்டகாசம்!

சாவகச்சேரி சந்திப் பகுதியில் தினமும் இரவு வேளைகளில் மதுபோதையில் திரிபோரால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகக் கூறப்படுகிறது.

பஸ்களில் இருந்து வரும் பயணிகளையும் வீதியில் செல்வோரையும் தகாதவார்த்தைகளால் இவர்கள் ஏசுவதையும் காணக் கூடியதாக உள்ளது.

சந்தியில் இராணுவப் பொலீஸார் கடமையிலுள்ளபோதிலும் அவர்கள் கண்டுங்காணாதது போல் இருப்பதால் மது வெறியர்களின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. (ஏ-177)

**நாளை**

மாசி 06
செவ்வாய்க்கிழமை
(18.02.2003)
திதி : துதியை
பின் இரவு 2.47 வரை.
நட்சத்திரம்: பூரம்
முன் இரவு 9.15 வரை.
சுபநேரம் : 11.02 - 12.32
ராகுகாலம் : 3.32 - 5.02
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

தன் பிரச்சினைகளைத் தீர்ப்பதன்மூலம் ஒவ்வொரு மனிதனும் உலகப் பிரச்சினையைத் தீர்க்க வழிவகுக்கலாம்.

## ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கு நிரந்தர வைத்தியரை நியமிக்குக!

### சுகாதாரப் பணிப்பாளரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.17

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.சுகாதாரசேவைகள் பிரதிப் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை தொகுதி ஓய்வூதியர் சங்கம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இது குறித்து மேற்படி சங்கம் சுகாதாரப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி (டி.எம்.ஓ.) இல்லாத நிலை தொடர்கிறது. இதனால், எமது பிரதேச மக்கள் குறிப்பாக குழந்தைகள், கர்ப்பிணிகள், வயோதிபர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

குறிப்பாக, அனலைதீவு, எழுவைதீவு பகுதி மக்கள் இதனால் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர். நீண்ட தூர கடற்பயணத்தை முடித்து பெரும் களைப்படைந்த நிலையில் ஊர்காவற்றுறைக்கு வந்துசேரும் குறிப்பிட்ட பகுதி நோயாளர்கள் அங்கு தகைமையான வைத்திய அதிகாரி இல்லாமையினால் மீண்டும் பஸ்ஸில் ஏறி சுமார் 20 மைல்களுக்கு அப்பால் உள்ள யாழ்.ஆஸ்பத்திரிக்கு செல்லவேண்டியுள்ளது.

- இவ்வாறு எழுவைதீவு, அனலைதீவு பகுதிகளில் இருந்து யாழ்.ஆஸ்பத்திரிக்குச் செல்லும் நோயாளிகள் நண்பகல் அளவிலேயே ஆஸ்பத்திரியை வந்தடைகின்றனர். [illegible] வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதில் [illegible] பெரும் சிரமங்களை அனுபவிக்கவேண்டியுள்ளது.

எனவே, தீவக மக்களின் நலன்கருதி [illegible] நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (எ)

# 6 ஆம் மாத நினைவஞ்சலி

மண்ணில் 21 - 07 - 1921



விண்ணில் 17 - 08 - 2002

## டாக்டர் தம்பு இராசையா

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து - வானுறையும்
தெய்வத்துள் ஒன்றான வைத்திய கலாநிதியே!
வையத்துள் நாம் வாழும்வரை - நீங்கள்
தெய்வமாய் வழிகாட்டி நிற்பீர்கள்!

*'ஸ்ரீரங்கம்'*
*சுதுமலை வடக்கு, மானிப்பாய்.*

பிள்ளைகள், உறவினர்கள்,
நண்பர்கள்.

(14578)

# 31ஆவது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 24 . 12 . 1946



மறைவு 18 . 01 . 2003

## அமரர் கந்தசாமி வேல்சாமிபாலன்

*அன்பும் பண்பும் மிக்க உயர் குணத்தோனே*
*ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.*

எமது அன்புத் தெய்வமாக விளங்கியவரின் மறைவுச்செய்தி கேட்டு நேரில்வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் ஆறுதலும் தேறுதலும் கூறியவர்களுக்கும் பலவித உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (17.02.2003) திங்கட்கிழமை நடைபெறுகின்ற அந்தியேட்டிக் கிரியைகளிலும் எமது இல்லத்தில் நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

*வடக்கு வீதி,*
*மிருசுவில்.*

(14388)

*அன்பு மனைவி, பிள்ளைகள்,*
*மருமகன், குடும்பத்தினர்.*

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் சீனியர் வேலுப்பிள்ளை

மலர்வு: 06.08.1937 மறைவு: 18.01.2003

விழி கசிந்து நாமிருக்க
விண்ணோக்கி சென்றதேனோ ஐயா?
பதைபதைத்து நாம் கதற
பார்க்காமல் போனதேனோ?
ஆறுமோ எம் மனம் ~ உங்கள்
ஆறாத நினைவில் நின்று!
பிரார்த்திக்கின்றோம் நாங்கள்
உங்கள் ஆத்மசாந்திக்காய்!

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இன்று (17.02.2003) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

*மலையந்தோட்டம்,*
*கொற்றாவத்தை,*
*வல்வெட்டித்துறை.*

(14398)

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


# வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி, தலைகால்
அவியல், சரும நோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல், மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்,
*சகல வியாதிகளையும்*
*குணப்படுத்துபவர்:*

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
*தொலைபேசி எண்: 222 2459*

(13906)


# ஐந்தாம் வருட நினைவலைகள்

மலர்வு 25 - 02 - 1975



உதிர்வு 12 - 02 - 1998

## திருமதி பன்னிருகரம் மதிவதனா (மதி)

திதி: பிரதமை 17.02.2003

விண்மதியே ~ நீ
விட்டு விட்டே வருகின்றாய்
எம் மதியே ~ நீ
என்றென்றும் இதயத்தில் வருகின்றாய்

*கந்தசாமி யோகேஸ்வரி*
*(யாழ். போ.வை.சா. ஊழியர்)*
*16/4, 2ஆம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.*

மகள் - வனிதாவும்
நின்நினைவே நினைவாக
நிற்பவர்களும்.

(14564)

# ஈராண்டில் ஈர விழிகளுடன்...!



## அமரர் சிவகுருநாதன் சிவரூபன்

*(ரூபன் ஒலி, ஒளி அமைப்பு உரிமையாளர்)*

அன்னை மடியில் 21-03-1978
ஆண்டவன் அடியில் 17-02-2001

*திதி: 25-02-2003*

எண்ணேழு தினங்கள் மௌனமொழி பேசி
நாலொரு தினங்கள் குரலோசை தந்த குயிலே
நீயழைக்கும் உறவுமுறை தினம் காதிலெதிரொலிக்குதடா!
உன் வெண்திரையில் உன் நிஜவுருவம்
எங்கள் விழித்திரையில் உன் நிழலுருவம்
எங்கள் மனத்திரையில் உன் நினைவுருவம்
எங்கள் முன்னிலையில் நீ வருவதுபா?
நீ மறைந்த நேரம் முதல்
உனை மறந்த நேரமில்லை
ஈர்பதினொன்றிலே பூவுலகைப் பிரிந்தவனே!
ஈராண்டு ஈரவிழிகளுடன் உனை நினைத்தபடி
உன் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கும்
உன் அன்பான நெஞ்சங்கள்!

*இராஜ வீதி,*
*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*

(C/26478)

நாளும் நதியாகப் பெருகும் உன் நினைவுகளுடன் வாழும்,
அப்பா, அம்மா, அக்கா, அண்ணா, தங்கை.


## விவசாயிகளே!

உங்களுடைய



மிளகாயில் – இலைச்சுருட்டியா?
தக்காளியில் – வெட்டுப் புழுக்களா?
கோவாவில் – இலையரிப் புழுக்களா?
கத்தரியில் – காய் துளைப்பான்களா?

கவலையை விடுங்கள்!




இவற்றைக் களைக்கிறேனென வருகிறது

# கல்க்ரோன் 500 ஈ.சி.

புரோபெனோபோஸ் உள்ளடங்கிய சக்திவாய்ந்த கிருமிநாசினி

(விவரங்கள் கொள்கலனின் வெளிப்புறத்தில்)

கிருமிநாசினிகள் ஆபத்தானவை; அவதானமாகப் பயன்படுத்தவும்

## ஹரிசன்ஸ் கெமிக்கல் (பிறைவேற்) லிமிட்டட்,
## இல.7, பிறே புறுக் பிளேஸ்,
## கொழும்பு - 02.

*கிடைக்கும் இடம்:–*

**முன்னணி வாய்ந்த விவசாய இரசாயன விற்பனை நிலையங்கள்**

யாழ். தொடர்புகளுக்கு

தொழில்நுட்ப விற்பனைப் பிரதிநிதி
*இல.235, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/26563)

# தவறான மருந்து பிரயோகம்; தடுக்க பல நடவடிக்கைகள்

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி (M.O.H.) பிரிவில் செயற்பட்டுவரும் தனியார் வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகள் மற்றும் தனிப்பட்ட முறையில் வைத்திய தொழில்செய்யும் ஆங்கில வைத்தியர்கள். சித்த, ஆயுர்வேத, சுதேச வைத்தியாகள் ஆகியோர்களுக்கான கலந்துரையாடல் கடந்த வாரம் நடைபெற்றபோது பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. கணேஸ்வரராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாண ஆயுர்வேத திணைக்களப் பணிப்பாளர் டாக்டர் ப.உ.ரோமகேஸ்வரன், தமிழீழ சுகாதார சேவைப் பிரதிநிதி ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலுக்கு தலைமை வகித்து உரையாற்றுகையில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.கணேஸ்வரராசா குறிப்பிட்டதாவது:-

அண்மைக் காலத்தில் பரவி வரும் இனம்புரியாத காய்ச்சல், டெங்கு காய்ச்சல், நெருப்புக் காய்ச்சல், மலேரியா ஆகிய நோய்கள் மக்கள் மத்தியில் ஏற்படுவதற்கும் இந்த நோய்களை கட்டுப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படும் மருந்துகளின் ஆற்றல் இழக்கப்படுவதற்குமான காரணங்கள் கண்டறியப்பட்டு அவற்றை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். இது விடயமாக யாழ்.மாவட்ட வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர், யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையை கவனத்துக்கு எடுக்கவேண்டும். தகுதியற்ற மருத்துவர்களின் செயற்பாட்டை கட்டுப்படுத்துதல் தொடர்பாக யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையில் இவ்விடயமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நுண்ணுயிர்க்கொல்லி (அன்ரிபயற்றிக்ஸ்) மருந்துகள் பாவனையின்போது அவை தவறாக பயன்படுத்தப்படுமிடத்து நோயை கட்டுப்படுத்தும் ஆற்றல் இழக்கப்படுகின்றது தவறான நுண்ணுயிர்கொல்லி மருந்தை பயன்படுத்துதல், உட்கொள்ளும் அளவு பிழையாக பாவித்தல், தேவையில்லாமல் பாவித்தல் ஆகியவற்றினாலும் நோய் குணமாவது தடைப்படுவதுடன் உயிராபத்து ஏற்படும் நிலையிலும் ஏற்படுகின்றது. இதனால் (Drugs Resistant) ஏற்பட்டு நோயாளிக்கு பெரும் பாதிப்பும் ஏற்படும். இதன்போது இந்த நோயாளிக்கு மட்டுமன்றி அவரது வீட்டிலுள்ள ஏனையவர்களுக்கும் இந்த மருந்தினது எதிர்ப்புத்தன்மை இல்லாதநிலை ஏற்பட ஏதுவாகின்றது.

**செய்திக் கட்டுரை**

குறிப்பாக ஆங்கில வைத்தியத்தில் ஈடுபட தகுதி படைத்த M.B.B.S., R.M.O., A.M.O. டாக்டர்கள் அல்லாதோரும் ஆயுர்வேத, சுதேச வைத்தியர்களும் ஆங்கில மருந்துகளை கையாள்வது, அதுபோல தனியார் மருந்தகங்களில் - பார்மஸிகளில் தகுதிவாய்ந்த மருந்தாளர் எவரும் (Pharmacist) இல்லாமல் இருப்பது, மருந்துச் சீட்டு எதுவும் இல்லாமல் மருந்து கொடுப்பது ஆகியவையே இந்த நிலை ஏற்படுவதற்கு காரணமாகும். இலங்கை மருத்துவ சபையில் (Sri Lanka Medical Council) ஆங்கில வைத்திய துறையில் ஈடுபட்டுவரும் வைத்தியர்களும் சித்த, ஆயுர்வேத, சுதேச வைத்தியதுறையில் ஈடுபட்டு வரும் வைத்தியர்களும் பதிவுசெய்து பதிவு இலக்கத்தை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும் - என்றார்.

முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாண ஆயுர்வேத திணைக்கள பணிப்பாளர் டாக்டர் ப.உ.ரோமகேஸ்வரன் உரையாற்றுகையில் -

சுதேச வைத்தியமான சித்த மற்றும் ஆயுர்வேத வைத்தியம் மிகவும் மகத்துவம் வாய்ந்தது. எமது முன்னோர்கள் தொன்றுதொட்டு பயன்படுத்திவந்த சிறந்த வைத்தியம் இது. சித்த, ஆயுர்வேத வைத்தியர்கள் ஆங்கில மருந்து வகைகளை பயன்படுத்துவதற்கோ அல்லது ஊசி போடுவதற்கோ அதிகாரம் அற்றவர்கள். ஆங்கில மருந்துகளை தங்கள் வைத்தியத்திற்கு பயன்படுத்துவதன் மூலம் அதன் புனிதத் தன்மையை கெடுத்துக்கொள்ளவேண்டாம் - என்றார்.

**நா.மா.கந்தசாமி**
*சண்டிலிப்பாய் செய்தியாளர்*

தமிழீழ சுகாதார சேவை பிரதிநிதி உரையாற்றுகையில் -

தவறான மருந்துப் பாவனையினால ஏற்படும் தீமைகள், பாதிப்புகள் என்பன பற்றி சுட்டிக்காட்டியதுடன் சுகாதார வைத்திய அதிகாரி இது விடயமாக மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு தாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம் என்றும் இது தொடர்பாக பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

பின்வரும் தீர்மானங்கள் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன:

1) வைத்தியர்கள் தாம் பெற்ற மருத்துவத்துறையிலேயே வைத்தியம் செய்யவேண்டும்

2) வைத்தியம் செய்வோர் தாம் மேற்கொள்ளும் வைத்தியத்துறை (ஆங்கிலமா அல்லது சுதேச வைத்தியமா) பற்றியும், பதிவு இலக்கம் பற்றியும் விவரங்களை தமது பெயர்ப் பலகையில் குறிப்பிட்டிருக்கவேண்டும்

3) வைத்தியர்கள் மருந்துச் சீட்டு எழுதும் போது அதில் தமது பெயர், மருத்துவ பதிவு இலக்கம் இடப்பட்ட முத்திரையை (றபர் ஸ்ராம்ப்) பதித்தல் வேண்டும்.

4) எவ்வகை வைத்தியராயினும் தம்மிடம் சிகிச்சைபெற வரும் தொற்று நோயாளர்கள் பற்றிய விவரத்தை உடனுக்குடன் சுகாதார வைத்திய அதிகாரிக்கு (M.O.H.) அறிவிக்கவேண்டும்.

5) மருந்தாளர் இன்றி பார்மஸிகளில் மருந்து விற்பது தடைசெய்யப்படும் S.L.M.C.யில் பதிவு செய்யாத மருந்து வகைகளை வைத்து விற்பது குற்றமாகும்

6) மருந்துச்சீட்டு இல்லாமல் மருந்து பொதுமக்களுக்கு விற்கப்படக்கூடாது.

இவற்றைக் கடைப்பிடிக்காமல் அசட்டை செய்யும் வைத்தியர்கள் மீதும் தனியார் மருந்தகங்கள், பார்மஸிகள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. ★

# உத்தேச மதமாற்ற தடைச் சட்டம் பசித்த வயிற்றுக்குச் சோறிடுமா?

மதமாற்றத்தைத் தடுக்க கொண்டு வரப்படவுள்ள சட்டம் மதம் மாறுபவர்களின் அன்றாடப் பிரச்சினையைத் தீர்க்க வழி செய்யுமா? என்ற கேள்வி சமீப காலமாகப் பலருக்கும் எழுந்துள்ளது.

பசி, பட்டினி, தொழில் இன்மை, பிள்ளைகளைப் படிப்பிக்க முடியாமை போன்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மதமாற்றத் தடைச்சட்டம் வழி சமைக்குமா என்பதே எழுந்துள்ள கேள்வியாகும்.

கடந்த இரு தசாப்த காலத்தில் இம்மண்ணில் உள்ள மக்களில் பலர் சொல்லமுடியாத கஷ்டங்களையும் அவலங்களையும் சந்தித்துள்ளார்கள். வாழமுடியாது என்ற நிலைமையில் தற்கொலை முயற்சிகளுக்குச் சென்று வைத்தியசாலைகளில் காப்பாற்றப்பட்டும் உள்ளனர்.

இவர்களில் சிலரை வைத்தியசாலைகளில் சென்று பார்ப்பதற்கு உறவினர்களோ அன்றி அயலவர்களோ இல்லாத நிலைமையில் அவர்களை மதப்பிரசாரகர்களே அங்கு சென்று பார்வையிட்டும் உதவிகளை வழங்கியும் வந்துள்ளனர்.

கடந்த காலங்களில் பல்வேறு பெயர்களில் பல மத பிரசாரகர்கள இம்மண்ணில் கடந்தகால யுத்தத்தை மையமாகக் கொண்டு வெளிப்பட்டுள்ளனர்.

ஆனால், இம்மதங்களை மக்கள் ஏன் ஏற்றுக்கொண்டார்கள் என்பது ஆராயப்படவேண்டிய விடயமாகும். உண்ண உணவில்லை. உடுக்க உடையில்லை யார் இதற்கு உதவி செய்து தம்மையும் மனிதராக ஏற்றுக்கொள்கிறாரோ அவர் பின் மனிதர் செல்வது இயல்பே. இதனையிட்டு விமர்சிக்கவோ, தடுக்கவோ பிறருக்கு உரிமை உண்டாவென்று பார்ப்பதே சிறந்தாகும்.

இந்து கலாசார அமைச்சு, மத மாற்றத்துக்கு எதிராக சட்டமூலம் ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளதாகக் கூறப்படுகிறது. ஒரு தனிமனிதன், தான் விரும்பிய மதத்தைச் சாரவும் விரும்பிய கடவுளை வழிபடவும் உரிமை உண்டென அரசியல் யாப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் யாப்புச் சட்டம் தெளிவாக ஒரு மனிதனின் மத சுதந்திரம் பற்றி கூறியிருக்கக்கூடியதாக அதனை மீறி சட்டம் ஒன்றின் மூலம் மத உரிமையை தடுக்க முற்படுவது அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

பணத்திற்காகவும் பல்வேறு சலுகைகளுக்காகவும் அரசியல் கட்சிகளின் பின் காலத்திற்கு காலம் ஓடலாம் என்றால் தனது ஆத்ம உளத் திருப்திக்காக ஏன் தனி ஒரு மனிதனோ அல்லது குடும்பமோ மதம் மாறக்கூடாது? இதனைத் தடுக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு முன்னிற்பவர்கள் இத்தகைய மதமாற்றத்திற்கான காரணத்தைக் கண்டு பிடித்து தீர்வுகாண முயலவேண்டும்.

புதிய மதங்கள் என்று கூறிக்கொண்டு இம்மண்ணில் எழுந்துள்ள மதங்களினால் இந்து மதத்தவர் மட்டும் பாதிப்படையவில்லை. கிறிஸ்தவ, பௌத்த மதத்தவர்களும் பாதிப்படைந்துள்ளார்கள் என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

இன்றைக்கு 25 வருடங்களுக்கு முன்னர் மறைந்த வண.பிதா சிங்கராய அடிகளார் யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் இடம்பெற்ற ஒளி விழாவின்போது, 'மதத் தலைவர்கள் தமது கடமைகளை சரியான முறையில் மேற்கொள்ளவிலலை. இளைஞர்கள் பாதைமாறிச் செல்லும் நிலை ஏற்பட்டுக்கொண்டு இருக்கிறது. ஆகவே மதத்தலைவர்கள் தமது கடமையை உணர்ந்து செயற்படவேண்டும்' என்று குறிப்பிட்டார்.

அவரின் அன்றைய கூற்று இன்று ஒரு நிதர்சனமாகக் காணப்படுகிறது என்பதை இங்கு நினைவுகூரவேண்டியுள்ளது. தற்போதைய மதமாற்றம் இம்மண்ணில் நடக்கும் துன்பங்களுக்கு எது காரணம் என்பதைக் கண்டுகொள்வதாக அமைந்துள்ளது.

இந்து மதத்தவர்கள் அண்மைக் காலமாக பிறமதங்களுக்கு மனமாற்றம் காரணமாக மதம் மாறிக்கொண்டிருக்கிறார்கள். இந்நிலைமை பற்றி இன்று வரைக்கும் இந்துமத அமைப்புக்கள் அல்லது இந்துமத குரு பீடங்கள், அமைச்சர்கள் கூட சரியான வழியில் சிந்திக்கவில்லையென்றே கூற வேண்டும்.

இந்துசமய அமைப்புகள்பல இருப்பதுடன் இந்துசமய குருபீடங்களும் காணப்படுகின்றன. ஆனால், இந்து மதத்தைச் சேர்ந்தவர்களின் வாழ்வியலுக்கு எவ்வளவுதூரம் சரியான முறையில் பொருளாதார ரீதியாக உதவி செய்துள்ளார்கள் என்பதே கேள்வியாகும். சில அமைப்புகள் தன்னையும் தன்னுடைய குடும்பத்தினரதும் தன்னைச் சார்ந்தவர்களது நல்வாழ்வுக்கும் வசதிக்கும் உழைத்தனவே அன்றி, இந்துமதத்திற்கு உழைத்தார்களே என்பதையிட்டு தாங்களே மனத்தைத் தொட்டு சிந்திக்க வேண்டும்.




தற்போதைய மதங்களைப் பொறுத்தவரையில் தனது மதம் சார்ந்தவர்கள், குடும்பம் ஆகியவர்களின் நல்வாழ்வுக்கான பொருளாதார வசதிகளையும் மற்றும் தொழில் வாய்ப்புக்களையும் ஏற்படுத்துகின்றார்கள். அது மட்டுமன்றி அவர்களின் குடும்பத்தில் நிகழும் மரணச் சடங்குகளில்கூட முன்நின்று பல்வேறு உதவிகளையும் செய்துவருகிறார்கள்.

ஆனால், இந்துசமயத்தவர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் தீட்டு - துடக்கு என்று கூறி இந்து மதத்தவர்களின் இத்தகைய நிகழ்வுகளில் கலந்துகொள்ளாது தவிர்த்து விடுகிறார்கள்.

அத்துடன், இந்து மதத்தவர்களின் வறுமையை நீக்க வாழ்வியலுக்கான வழிவகைகளையோ அன்றி திட்டங்களையோ கொண்டு இருக்கின்றார்களோ என்றால் இல்லையென்றே கூற வேண்டும். அன்று முதல் இன்று வரை இந்து மதகுருமார் தமது பொருளாதாரத்தில் கண்ணாக இருக்கின்றார்களேயன்றி மதவளர்ச்சியில் எவ்வளவு தூரம் ஆர்வம் கொண்டுள்ளார்கள்? இதற்காக என்ன செய்தார்கள் என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

இந்து மதத்தில் உள்ளவர்களின் வறுமை நீங்க வழிகாட்டப்படவேண்டும். முன்னர் இருந்த இந்து கலாசார அமைச்சர் பல கோடி ரூபாவை ஆலயங்கள் திருத்தத்திற்கு என்று கணக்கு வழக்கு இன்றி வாரி வழங்கினார்.

இன்றைய இந்து கலாசார அமைச்சர் ஆலயங்கள் முதல் பாடசாலைகள்வரை ஓட்டோக்கள் வழங்குவதிலும் ஆலயங்களுக்கு மீண்டும் புனருத்தாரண நிதி வழங்குவதிலும் ஈடுபட்டுள்ளார்.

இன்றுவரைக்கும் கடந்த காலத்தில் இடம்பெற்ற போர் காரணமாக வறுமையில் வாழும் இந்து மக்களின் பொருளாதார அபிவிருத்திக்கான தொழில்வாய்ப்புக்களோ, அன்றி கடன் திட்டங்களோ ஏற்படுத்தினார்களா என்றால் இல்லை?

இவர்கள் எல்லாம் மதத்தின் பெயரால் தமதும் தமது குடும்பத்தினரதும் வசதி வாய்ப்புக்களை பெருக்கி, சுகபோக வாழ்க்கைக்கு செல்கின்றார்களே அன்றி மத வாழ்க்கைக்கு செல்லவில்லை. மக்களின் நல்வாழ்வுக்கு வழிசமைக்கவில்லை.

கிறிஸ்தவ மதத் தலைவர்களும் இன்று சிந்திக்கத் தொடங்கியுள்ளார்கள் ஏன் என்றால் மிகவும் இறுக்கம், கட்டுப்பாட்டுடன் இருந்த றோமன் கத்தோலிக்க மத மக்களும் மதமாற்றத்திற்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றார்கள்.

இன்று கிறிஸ்தவ மத அமைப்புகள் தம்மைச் சார்ந்தவர்களுக்கு உதவி செய்யவென பல்வேறு பொருளாதார சமூக அமைப்புக்களைக் கொண்டுள்ள போதிலும், மதமாற்றம் இடம்பெற்றுக்கொண்டேதான் இருக்கின்றது. இவர்களும் இதனைப் பற்றி சிந்திக்கவும் முன்னேற்பாடு நடவடிக்கைகளையும் எடுக்க முற்பட்டுள்ளனர்.

பௌத்தமத தலைவர்கள், குருமார்கள் இன்று புத்தரின் கொள்கையை விட்டவர்களாகவும், விற்றவர்களாகவுமே காணப்படுகின்றனர். புத்தர் ஆசைகளை விட்டு அரசைத் துறந்து துறவறம் பூண்டார்.

ஆனால், பௌத்தகுருமார்கள் புத்தரின் கொள்கையென்று கூறிக்கொண்டு புத்தர் தனது வாழ்க்கையில் எவற்றை வெறுத்து துறவறம் பூண்டாரோ அவற்றில் அரசியல் அதிகார ஆசையில் அலைவதை காணமுடிகிறது. முதல் தடவையாக இலங்கை நாடாளுமன்றத்தில் பௌத்தகுரு ஒருவர் இடம்பெற்றுள்ளமையும் அரசியல் ஆசைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

**வில்லவன்**

எனது நோக்கம் மதத்தலைவர்களையோ அன்றி மதப்பீடங்களையோ விமர்சிப்பதோ அன்றி குற்றம் சாட்டுவதோ அல்ல. மதகுருமார் என்று கூறிக்கொள்பவர்கள் மதங்கள் காட்டும் வழியில் தாங்கள் செயற்படுகின்றார்களா? அல்லது தன்னுடைய மதம் சார்ந்தவர்களுக்கு வழிகாட்டுகின்றார்களா? அவர்களுடைய வறுமை துன்பம் நீங்க பங்களிக்கின்றார்களா? என்பதையிட்டு கவனம் செலுத்தவேண்டும்.

மதமாற்றத் தடைச்சட்டம் தனிமனிதனின் அடிப்படை உரிமையை மீறும் செயலாக அமையுமே அன்றி மதம் மாறுபவர்களின் வாழ்வியலுக்கான வழியைப்காட்டாது. ஆகவே, எந்த ஒரு மதமும் மனித வாழ்வுக்கான வழிகளைத் தன்னை சேர்ந்தவர்களுக்கு காட்டுமாக இருந்தால் ஏனைய மதங்கள் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தமுடியாது. அத்துடன், மதம் மாறிச் செல்வதற்கும் சந்தர்ப்பம் இல்லையென்பதை உணரவேண்டும்.

அடுத்த மதத்திற்கு மாறுகின்றார்கள் என்று கூக்குரல் இடுவதிலும் பார்க்க தனிமனித உரிமைக்கு மதிப்பளித்து சரியான வழியைக் காட்டினால் மதமாற்றம் என்பதற்கு இடமில்லை. ★

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Yamaha Mate 90 மோட்டார் சைக்கிள் சகல ஆவணங்களுடனும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தி. திருநாவுக்கரசு, இலக்கம் 55(105), கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P 222 2340. (14575)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதியாகப் பணிபுரியும் நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு யாழ். மாநகர எல்லைக்குள் வீடு வாடகைக்குத் தேவை. விளம்பர இல. 1785, மே/பா உதயன். (14687)

யாழ்.மூன்றாம் குறுக்குத்தெருவில் சகல வசதிகளுடன் வீடும், மாணவர்களுக்கு உகந்த அறைகளும் வாடகைக்குண்டு. தொடர்பு: ரெலி போன் 222 2273. (14585)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Prima, Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 20-02-2003 வியாழக்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். முற்கூட்டியே பதிவுசெய்யவும். இல.19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (14391)

## தவறிவிட்டது

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த பேரின்பநாதன் சத்தியசீலன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.782595091V) கோண்டாவிலுக்கும் பொற்பதி வீதிக்கும் இடையில் 15-02-2003 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இராமகிருஷ்ண மகாவித்தியாலய ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (14583)

இறம்பைக்குளம் வவுனியாவைச் சேர்ந்த தயாபரன் என்பவருடைய மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம், S.துரைரட்ணம் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் T.P 0777 246520, 222 3178 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (14592)

## நாடகம்

வானொலியில் "ஒரு ஆசிரியர் ஓய்வு பெறுகிறார்" நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1.இலக்கியக்கட்டுரைகள் 2.வீட்டிறவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும் 3.எங்கள் நாடு 4.இலக்கிய விமர்சனம். (14590)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் உதவி மனேஜராகப் பணிபுரியும் 75ஆம் ஆண்டு பிறந்த, அனுஷ நட்சத்திரமுடைய மணமகனுக்கு படித்த, அழகான 5'-4" உயரத்துக்குக் குறையாத மணமகளை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: T.P. 0777 733464 (இரவு 8 மணிக்குப் பின்) (14593)

## மூளாய் ஆலய வீதி பலத்த சேதம்

அராலி,பெப்.17

மூளாய் சித்தி விநாயகர் ஆலய முன்வீதி, பாரிய குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

காரைநகர் பிரதான வீதியின் அருகில் அமைந்திருக்கும் இவ்வாலய முன் வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படவில்லை. (எ-14)

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி,பெப்.17

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, செல்வச் சந்நிதி கோயில் சுற்றாடலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'பகவத்கீதை' என்னும் தலைப்பில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் சொற்பொழிவாற்றுவார்.

பேரவைத் தலைவர் இ.நாகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை லயன் கே.செல்வரட்ணம் வழங்குவார். (எ-173)

# கோண்டாவிலில் பாதீனிய அபாயம்!

வலிவடக்கு,பெப்17

கோண்டாவில் கிழக்குப் பகுதியில் பாதீனியம் செடி மீண்டும் வளர்ந்து பரவி வருவதாக நல்லூர் பிரதேச செயலக விவசாயக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச செயலக விவசாயக் குழுக் கூட்டம் உதவி பிரதேச செயலாளர் எஸ்.ரவீந்திரசர்மா தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

கோண்டாவில் கொட்டைக்காடு மயானப்பகுதியில் உள்ள தோட்ட வெளியிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் பாதீனியம் செடி வளர்ந்துள்ளதாகவும்-

இதனை அழிப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை விவசாயத் திணைகளம் மேற்கொள்ள வேண்டும் எனவும் - தீர்மானிக்கப்பட்டது. (ஓ-80)

# உள்ளம் உவகப் பாராட்டுகிறோம்



J/321 மீசாலை வடக்கு
கிராம அலுவலர்

## திரு. கந்தையா சுந்தரராசா

அவர்கள் தமது பதவியில் முதலாம் தரத்திற்குப் பதவி உயர்த்தப்பட்டமையை இட்டு அவர்களை எமது உள்ளம் உவகப் பாராட்டுகின்றோம். மேலும் அவர்கள் இன்னும் பல உயர்வுகள் பெற்றுச் சீரோடும் சிறப்போடும் நன்றாக வாழவேண்டும் என்று எல்லாம்வல்ல சுயம்பு மூர்த்தியான கலட்டியிற் பிள்ளையாரை வேண்டி வணங்கி நிற்கிறோம்.

*மீசாலை வடக்கு,*
*வேம்பிராய்,*
*மீசாலை.*

(14595)

பரிபாலன சபையினர்,
கலட்டியிற் பிள்ளையார்
தேவஸ்தானம்.

# நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 1923 - 07 - 01



உதிர்வு 2003 - 01 - 19

## திருமதி குலசேகரம் நாகம்மா

கடந்த 19.01.2003 இல் இறைபதமடைந்த எமது அன்பு இல்லத் தலைவி திருமதி குலசேகரம் நாகம்மா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (17.02.2003) திங்கட்கிழமை காலை நடைபெறும். அத்துடன் எமது இல்லத்தில் நிகழ்கின்ற அன்னாரது ஆத்மசாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"நினைவுகள் என்றும் மரணிப்பதில்லை."

*கண்டி வீதி,*
*கொடிகாமம்.*

(14591)

தம்பு இராமநாதன்
குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 12 - 01 - 1922



ஆண்டவன் அடியில் 18 - 01 - 2003

## தம்பு சிவபாக்கியன்

18.01.2003 அன்று எம்மை விட்டுப்பிரிந்து இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் மரணச்செய்தி அறிந்து எமக்கு வேண்டிய உதவிகளை செய்தும் மலர்வளையங்கள் சாத்தியும் கண்ணீர் அஞ்சலியை பத்திரிகைகளிலும் பிரசுரங்களிலும் வெளியிட்டதோடு அனுதாபச் செய்திகள் அனுப்பிவைத்தும் வெளியூரிலிருந்து விரைந்தோடி வந்து எம்மை ஆற்றித் தேற்றியவர்களுக்கும் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்ட அயலவர்கள், அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் -

இன்று (17.02.2003) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*198,சென்.பெனடிக் ரோட்,*
*அரியாலை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

(14599)

-குடும்பத்தினர்.

# YOGI HOME SCIENCE ACADEMY

புதிய வகுப்புகள் 21.02.2003 அன்று ஆரம்பமாக உள்ளன.

1) Fabric Painting (Special Course)
2) கிறிஸ்ரல் அழகுப்பொருள் செய்முறை
3) முக ஒப்பனையும் தலை அலங்காரங்களும் இதில் செய்முறைப் பயிற்சிகளுடன் இந்திய, கண்டிய, குஜராட்டி, மடிசார் போன்ற வித்தியாசமாக சாறிகட்டும் முறைகளும் பயிற்சியளிக்கப்படும். சேரவிரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்.

75,அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)

(14574)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு.ஆ.நடராசா

J/294, J/295

அவர்கள் தன்னலமற்ற தமது மகத்தான சேவையினால் மக்களின் நலனுக்காக அயராது உழைத்து, கிராம அலுவலர் தரம் 1 இற்குப் பதவி உயர்வு பெற்றமையிட்டு நாம் மிக மகிழ்ச்சியுடன் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று தம் சேவையை நலமுடன் புரிய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

(14589)

கிழக்கு நாவற்குழி மக்கள்.

# நன்றி அறிவித்தல்

## நடராசா வன்மீகநாதன்

14.02.2003 அன்று காலமான காங்கேசன்துறை காட்டடைப்பு வீதியைச் சேர்ந்த நடராசா வன்மீகநாதன் அவர்களின் இறுதிநிகழ்வுகள் நேற்று முன்தினம் (15.02.2003) சனிக்கிழமை கிளிநொச்சி கனகபுரத்தில் நடைபெற்று உடல் திருநகர் சுடுகாட்டில் எரியூட்டப்பட்டது.

இந்த இறுதி நிகழ்வுகளில் கலந்துகொண்டவர்களுக்கும் இரங்கல் செய்திகளைத் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தகவல்:
**வெ.இளங்குமரன் (பேபி)**
(தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர்)

(C/26577)

# அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு

எமது குடும்பத் தலைவர்

## அமரர் ஆ.சுப்பிரமணியம் (Artist Sir)

*(முன்னாள் பதில் அதிபர், யா/விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி)*

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 19.02.2003 புதன்கிழமை காலை 6.00 மணியளவில் நடைபெறும். மேலும் அவரது இல்லத்தில் நிகழ்கின்ற வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை ஆகியவற்றில் பங்குகொள்வதோடு நண்பகல் மதியபோசனத்திலும் குடும்பசகிதம் வருகைதந்து கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"பாக்கியஸ்தான்"*
*துரையன் தோட்டம்,*
*நவிண்டில், கரவெட்டி.*

(C/26379)

குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலை இரண்டாம் வருட ஆரம்பநெறி 'C' பிரிவைச் சேர்ந்த ஆசிரிய மாணவி **செல்வி கோகுலவர்த்தனி** அவர்களின் அன்புத் தந்தையார்

## ந.சதாசிவம்

அவர்களின் மறைவையொட்டி துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கோப்பாய். (c/26578)

கோப்பாய் ஆசிரிய
கலாசாலைச் சமூகத்தினர்.

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை ரவிராஜ்

(ஓய்வு பெற்ற தொலைபேசி இயக்குநர், இந்தியன் ஓவசீஸ் வங்கி)
(*Indian overseas Bank*)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை ரவிராஜ் (ஓய்வுபெற்ற வங்கி ஊழியர்) அவர்கள் நேற்று (16.02.2003) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் சோதி ஆகியோரின் அன்பு மகனும் பத்மநாதன் - இரத்தினதேவி ஆகியோரின் அன்பு மருமகனும் யசோதாவின் அன்புக் கணவரும் சோபனா, யதுர்ஷனன் (யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தகுமாரி, குமுதா (லண்டன்), வனிதா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் மயில்வாகனம், சின்னராசா (லண்டன்), ஜெகதாஸன் (லண்டன்), பக்த வக்ஸலன், ராதை (கனடா), பரந்தாமன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2003) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*480/1, கனகசபை அவெனியூ,*
*K.K.S. வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(14588)

தகவல்:
யதுர்ஷனன் (மகன்)

போராட்டம் வீரியம் பெற்ற வேங்கைகளின் காலத்தில்

# உழுத்துப்போன சாதிப் பிரச்சினையை சுயநலத்துடன் கிளப்பும் ஆனந்தசங்கரி!

## யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் சாடல்

யாழ்ப்பாணம்,பெப்.17

ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டம் வேங்கைகளின் காலத்தில் வீரியம் பெற்றுள்ளது. இந்த வேளையில் என்றோ உக்கி, உழுத்துப்போன சாதிப் பிரச்சினையை தனது சுயலாபத்துக்காக ஆனந்த சங்கரி மீண்டும் கிளப்புகிறார்.

யாழ்.மாவட்டப் பொது அமைப்புகளின் ஒன்றியம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

யாழ்.பொது நூலகத் திறப்புவிழா தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி விடுத்த அறிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

யாழ். மாவட்டத்திலுள்ள உயிர்த்துடிப்பான அனைத்து பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து முழுமை பெறாத நூலகத் திறப்பு விழாவைப் பிற்போடுமாறும், துரித கதியில் புனரமைப்புப் பணிகளை நிறைவு செய்யுமாறும் ஒருமனதாகத் தீமானம் எடுத்தனர்.

எம்மால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை மாநகர முதல்வரும், உறுப்பினர்களும் உதாசீனப்படுத்தியதாலும், திறப்பு விழாவை திட்டமிட்டபடி நடத்தியே தீருவேன் என முதல்வர் அடம்பிடித்து நின்றதாலும், இவ்விடயம் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல துறையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

எமது கருத்துக்களின் நியாயத்தன்மைக்கு மதிப்பளித்தே விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற் துறையினர் மாநகர முதல்வரை நேரில் சந்தித்து விடயத்தைத் தெளிவுபடுத்தினரே தவிர, தலையிடவில்லை. இதை முன்னாள் முதல்வர் செல்லன் கந்தையன் புரிந்துகொள்ள வேண்டுமென்பது எமது விருப்பமாகும்.

நூலகத் திறப்புக் குறித்து விடுதலைப் புலிகளை சம்பந்தப்படுத்தி மாநகர முன்னாள் முதல்வர் கருத்துத் தெரிவித்திருந்தது மிகவும் வேதனைக்குரியது; இது ஏற்புடையதுமல்ல.

மாபெரும் வரலாற்றுத் தவறிலிருந்து எம்மைப் பாதுகாக்கவே முழுமை பெறாத யாழ்ப்பாண பொது நூலகத்தைத் திறப்பதை நாம் பிற்போடும்படி வேண்டினோம். அது தவிர எந்த அரசியல் மற்றும் சமூக பிற்போக்குதனமும் காரணமல்ல.

ஆனந்தசங்கரி அவர்களே! கடந்த 14ஆம் திகதியன்று தங்களால் வெளியிடப்பட்ட அறிக்கை தங்களது தனிப்பட்ட கருத்தா? அல்லது தங்கள் கட்சியின் கருத்தா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகின்றோம்.

இது தங்களுடைய கருத்தானால், தாங்கள் இன்றும் சாக்கடை அரசியலில் இருந்து தங்களை விடுவித்துக் கொள்ளவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

யாழ்ப்பாண பொது நூலகத்தின் ஊடாகத் தேடல்களைப் பெற்று சட்டத்தரணியானதாக மார்தட்டி பெருமை பேசுகின்றீர்கள். முறையான தேடல்களைத் தாங்கள் பொது நூலகத்தில் இருந்து பெற்றிருப்பீர்களானால் இவ்வாறான கீழ்த்தரமான முறையில் பத்திரிகை அறிக்கைவிட்டு சமூகத்தைக் குழப்புவதற்கு துணிந்திருக்க மாட்டீர்கள்.

அரசியலின் அஸ்தமனத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த தாங்கள் ஏக பிரதிநிதிகள் என்ற அரசியல் அலையில் விபத்தின் காரணமாகக் கரை சேர்ந்துவிட்டீர்கள். ஆகவே, இது தங்களுக்கு கிடைத்த ஆதரவென பெருமை பேசமுடியாது; கனவும் காண முடியாது.

வரலாற்றுப் பெருமைமிக்கதும், தென்கிழக்காசியாவின் முதன்மை வாய்ந்ததும், தமிழ் மக்களின் கல்வி, கலை, பண்பாட்டின பெட்டகமுமான யாழ். பொது நூலகத்தினை முற்று முழுதான புனரமைப்புடன் இயல்பான சூழ்நிலையில் திறக்கும்படிதானே தங்களையும் மாநகர முதல்வரையும் பெருந்தன்மையுடன் நாம் கேட்டிருந்தோம். அதற்கு தாங்களும் மாநகர முதல்வரும் குழம்பிய நிலையில் நின்றதுடன் மக்களையும் குழப்ப முற்பட்டுள்ளீர்களா என நாம் கருதுகின்றோம். இது தங்களுக்கு கைதேர்ந்த கலை. ஆனால், மக்கள் மிகவும் இது விடயத்தில் தெளிவாகவுள்ளார்கள்.

மேற்படி நூலகத் திறப்புவிழா சம்பந்தமான விடயம் ஒருவர், இருவர் எடுத்த முடிவல்ல. அதேவேளை, தாங்கள் நினைப்பது போல் அல்லது முன்னாள் முதல்வர் செல்லன் கந்தையன் கூறுவது போலும் அல்ல.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்குகின்ற - உயிர்த்துடிப்புள்ள, மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுகின்ற முந்நூறுக்கும் மேற்பட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஒருமனதாக எடுத்த முடிவின் பிரதிபலிப்பே இது.

இந்த முடிவின் அழுத்தம் காரணமாகவே, தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறையினர் தலையிடவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இதற்கு வழிசமைத்தவர்கள் தங்கள் மாநகர சபை உறுப்பினர்களும் மாநகர சபையில் அங்கம்வகிக்கும் தேசவிரோத கும்பல்களும் என்பதை கவலையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

அதேவேளை, நூலகத் திறப்பு விழா பிற்போடப்பட்டுள்ளமைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.

இந்த நூலகத்தை திறந்து வைத்து வரலாற்றில் இடம்பிடித்துக் கொள்ள தாங்கள் எடுத்துக்கொண்ட பிரயத்தனம் கைகூடவில்லை என்ற ஆதங்கத்தில் இந்தப் பத்திரிகைச் செய்தி வெளிவந்திருக்கலாம். அது மனித இயல்புதான்.

ஆனால், இந்த நூலகத்தை வேறொருவர் திறக்க ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்குமானால், நீங்களும் நிச்சயமாக எங்களுடன் இணைந்து இதே ஆட்சேபனையை தெரிவித்திருப்பீர்கள் என்பதில் எமக்கு சந்தேகம் இல்லை.

முழுமை நிறைந்த பொது நூலகத்தை தாங்களோ அன்றி அன்றைய மாநகர முதல்வர் செல்லன் கந்தையனோ திறந்துவைப்பதற்கு எமக்கு எவ்வித ஆட்சேபனையுமில்லை. அது நல்ல சூழ்நிலையில் முழுமையான வளங்களுடன் திறந்து வைக்கப்படவேண்டுமென்பதே எமது விருப்பமாகும்.

ஆனால், யாழ்ப்பாண சமூக அமைப்பில் மிகவும் பிற்படுத்தப்பட்ட ஒரு சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் இந்த மாநகர முதல்வராக இருந்த காலத்தில் இந்தப் பொதுநூலகத்தைத் திறந்து வைக்கும் பெருமைக்

(12ஆம் பக்கம் பார்க்க)

# பாசத்தளையறுக்கும் மாசி மகம்

இன்று மாசிமகவிரத நன்னாள். சிவபெருமானுக்குரிய சிறப்புமிக்க விரதங்களில் இது மிகவும் மகிமை வாய்ந்தது. இந்த விரதம் சைவ மக்களால் பெரிதும் அனுட்டிக்கப்பட வேண்டிய ஒரு விரதமாகும். மாசி மாதத்தில் வரும் மக நட்சத்திர நாளில் அதிகாலையிலே எழுந்து சிவத் தியானத்துடன் நீராடி சந்தியாவர்த்தனம் முடித்து ஆலய தரிசனத்துடன் இந்த விரதத்தை ஆரம்பிக்க வேண்டும்.



### விரத பலன்

இந்தப் புனித நாளில் விரதம் நோற்பவர்கள் தங்களாலியன்ற தான தர்மங்களைச் செய்தல் வேண்டும். குறிப்பாக ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கி அவர்களுடைய உள்ளங்களைக் குளிரச் செய்தால் நமது

### வியாதி குணமாகும்

அத்துடன், இந்த மாசிமக விரதம் அனுட்டித்தால் முக்கியமாக உடலிலுள்ள வாதம், சரீரப் பிடிப்பு முதலியன சுகமாகும் என்று கூறப்படுகிறது. ஆனால், விரதகாரர் புண்ணிய

## இன்று மாசிமக விரத நன்னாள்

வாழ்க்கையில் துன்ப, துயரங்கள் விலகி, இன்னல் இடுக்கண்கள் அகன்று மகிழ்ச்சி நிலவும் என்பது ஆன்றோர் கருத்து.

இந்த விரதம் அனுட்டித்தால் நமது பூர்வீகப் பாவங்கள் தொலையும். பாசவினைகள் நீங்கி இறைவனின் நேச அருள் கிட்டும். மும்மலத் தளைகளினால் கட்டுண்டு பிறந்துழலும் ஆன்மா இறைபதத்தை அடைந்து பரிபூரணானந்த நிலையை அடையும் என்பது நம் முன்னோர் கருத்து.

மேலும் இந்த மாசிமக நன்னாளில் மக்களின் பசிப்பிணி போக்கினால ஆயிரம் அந்தணர்களுக்குத் தானம் கொடுத்த பலன் கிட்டும் என்று கருதி நம் முன்னோர்கள் தொன்று தொட்டு அன்னதானப்பணி செய்து வருவதும் வழமை.

நதிகளில் நீராடினால்தான் வியாதி குணமாகும் என்பது ஆன்றோர் நம்பிக்கையாகும்.

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரத்தில் இந்த மாசிமக நன்னாள் மிக விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது. அடியார்கள் மாமாங்கத்தில் தீர்த்தமாடி இறைபக்தியுடன் சிவவழிபாடியற்றி ஆனந்திப்பர்.

### உள்ளத்தைத் தொடும் காட்சி

அடியார்கள் எல்லோரும் ஒருமித்த கோஷத்துடன் "அரோஹரா" என்று ஒலியெழுப்பி மாமாங்கத்தில் நீராடும் காட்சி உள்ளத்தைத் தொடும். தீர்த்தமாடிவிட்டு அதே ஈர ஆடைகளுடனேயே வீதிவலம் வந்து எம்பெருமானைத் தரிசித்து தீர்த்தக் காவடிகளும் எடுத்து நேர்த்திக்கடன்களைப் பூர்த்தி செய்வர்.

மட்டக்களப்பு மாநகரமே விழாக்கோலம் பூண்டுவிடும். எங்கு பார்த்தாலும் வாழைகளும், மகரதோரணங்களும் கண்களுக்கு ரம்மியமான காட்சியை அளிக்கும். மக்கள் எல்லோரும் புனிதமாக ஆலய தரிசனம் செய்து ஏழைகளுக்குத் தான தர்மங்கள் செய்வர்.

### நோய் தீர்க்கும் நாள்

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திலும் இந்த மாசிமக விரதம் புனிதமாகக் கருதப்பட்டு மக்களால் அனுட்டிக்கப்படுகின்றது. பஞ்சரதங்களில் அஞ்சேலென அபயமளித்து, அடியார்களின் உள்ளங்களைக் கொள்ளைகொண்டு, ஆரோகணித்துக் கோலாகலமாக வீதிவலம் வந்த லோகமாதாவாகிய அன்னை ஸ்ரீ முத்துமாரியம்மன், பக்தர்களுக்கு அருட்காட்சி நல்கி திருவருள் புரிந்து நோய் தீர்க்கும் நாளும் இந்நாளே!.

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகியாக விளங்கி பூதலத்து மக்களுக்கெல்லாம் அன்னமிட்டு அன்னபூரணியாக விளங்கும் அம்பிகையை இந்த மாசிமக நாளில் விரதமிருந்து வழிபாடியற்றினால் நமது துன்பங்கள், துயரங்கள் யாவும் சூரியனைக் கண்ட பனி போல விலகி ஓடிவிடும்.


### நல்வாழ்வு கிட்டும்

மாசிமகத் தீர்த்தமாடினால் பிறவிப் பிணி நீங்குவது மட்டுமன்றி உடற்பிணியும் நீங்கி சுகதேகிகளாக வாழலாம் என்பது தொன்றுதொட்டு நிலவி வருகின்ற சைவப்பாரம்பரியமாகும். ஆகவே, சைவ மக்களாகிய நாம் இன்றைய மாசிமக விரதத்தை அனுட்டித்து உலகில் சந்தோஷமும் சுபிட்சமும் அமைதியும் நிறைந்த சுகவாழ்வு வாழ்ந்து சதுர்வித புருஷார்த்தங்களையும் அடைந்து நல்வாழ்வு வாழ வழி சமைப்போமாக. ★

## கல்விச்சாலைக் காட்சிகள்



தம்பாட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்ற தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஊர்காவற்துறை மக்கள் வங்கி முகாமையாளர் ஜி.சற்குணபாலன், மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (எ-88)



கச்சாய் அ.த.க.வித்தியாலயத்தில் நடைபெற்ற தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட 'யுனிசெவ்' அமைப்பைச்சேர்ந்த செலின் லோகேபிரட், மாணவன் ஒருவனுக்கு கற்றல் உபகரணப் பொதியை வழங்குவதைப் படத்தில் காணலாம். (எ)



பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் புதிதாக நிறுவப்பட்ட சரஸ்வதி சிலை திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். (எ-135)



மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட செயற்பாட்டு அறையை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். (எ-75)

# அம்பாறைமாவட்டத்தில் அமெரிக்கா எதிர்ப்புத் தினம்

## வெள்ளி ஜும்ஆ தொழுகைக்குப்பின் ஆர்ப்பாட்டம்

நிந்தவூர்,பெப்.17

ஈராக் மீது அநியாயமாகப் போர் தொடுக்க அமெரிக்கா ஒற்றைக்காலில நிற்கிறது. அமெரிக்கா இந்த போர் முனைப்பைக் கைவிட வேண்டும் என்று கோரி எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்குகிறது அம்பாறை மாவட்டம்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமையை அமெரிக்க எதிப்புத் தினமாகப் பிரகடனம் செய்திருக்கிறார்கள் அம்பாறை மாவட்ட எம்.பிக்களான எம்.ஐ.அன்வா இஸ்மாயிலும், எச்.எம்.எம்.ஹரீஸ்"ம்.

அன்றைய தினம் ஜும்ஆ தொழுகைக்குப் பின்னர் கிராமம் கிராமமாக மக்கள் அமெரிக்காவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களிலும் பிற எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டும்; ஈராக் மக்களுக்காக துஆ பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். குப்தா பிரசங்கங்களில் அமெரிக்காவின் அடாத செயலைக் கண்டித்து, மக்கள் மத்தியில் எதிர்ப்பலைகளை எழுப்ப வேணடும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

(ஐ)

## தவறிவிட்டன!

தபோதினி பரமசிவம் (835400509V), கஜேந்தினி பரமசிவம் ஆகிய இருவரினதும் தேசிய அடையாள அட்டைகளும், விசேட அடையாள அட்டைகளும் 10.02.2003 நேற்று நயினாதீவில் இருந்து நவாலிக்கு திரும்பும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அடையாள அட்டையிலுள்ள விலாசத்திற்கு அல்லது கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும் அல்லது தொடர்புகொள்ளவும். கண்டெடுத்தவர்களுக்குரிய சன்மானம் வழங்கப்படும்.

நா.பரமசிவம்
"சிவகிரி இல்லம்"
அரசடிச்சந்தி,
நவாலி வடக்கு, மானிப்பாய்.
(14616)

## கண்ணீர்ப் பூக்கள்

கலாபூஷணம் பெ.பிச்சையப்பா அவர்களின்
பாசமிகு பேர்த்தி
### செல்வி ரஜீந்திரன் ஸாரங்கி
அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தாரோடு நாமும எமது துயரைப் பகிர்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அன்னை ஸ்ரீ சாயி துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலனசபை,
ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்.
கொக்குவில். (14613)

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானத்தின் ஆஸ்தான வித்துவான் "கலாபூஷணம்" P.S.பிச்சையப்பா அவர்களின் போத்தியும் ஈழநல்லூர் நாதஸ்வர வித்துவான் திரு. ரஜீந்திரன தம்பதிகளின் ஏகபுத்திரியுமான,
### செல்வ ர.ஸாரங்கி
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

பாலசம்ரக்ஷாணா
நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம்.
(14610)

## இதயம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலிகள்

எமது கல்லூரியின் இசை ஆசிரியை
திருமதி வாஸஸ்பதி ரஜீந்திரனின் ஏக புத்திரி
### செல்வி ஸாரங்கி ரஜீந்திரன்
அவர்கள் திடீரென இயற்கையெய்திய செய்திகேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கேற்பதோடு, செல்வியின் ஆத்மா சாந்திபெற வைத்தீஸ்வரனின் அருளை வேண்டுகின்றோம்.

யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி,
யாழ்ப்பாணம். (14606)
- ஆசிரிய நலன்புரிக் கழகம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது உடுவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி சிவசோதி அவர்களின் அன்புத் தந்தையார்
### கதிரவேலு நடராசா அவர்கள்
15.02.2003 சனிக்கிழமை அன்று காலமானதையிட்டு துயரமிகுதியால் மனங்கலங்கி நிற்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
உடுவில். (14603)
சமுர்த்தி அபிவிருத்தி
உத்தியோகத்தர்கள்.

## மரண அறிவித்தல்

### ஆண்டி சோமு

யாழ்.திருநகர், இராஜசிங்கம் வீதியைச் சேர்ந்த ஆண்டி சோமு அவர்கள் 14.02.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அரசவடிசாலையில் பணியாற்றி ஓய்வுபெற்றவரும், யாழ். பாரதி சனசமூக நிலையத் தலைவரும், திருநகர் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினரும், சமூக சேவையாளரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று (17.02.2003) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு பாரதி சனசமூக நிலைய முன்றிலில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் பி.ப. 3.30 மணிக்கு கொழும்புத்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
J.P.U.M.பெர்னாண்டோ
(மைத்துனர்).
(14618)

## ஆஸ்திரேலியா... இந்துமத கருத்த... ...

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் எதிர்வரும் 20ஆம் திகதி முதல் ஒருவாரம் இந்துமத ஆன்மீக கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

சிட்னி சைவ மன்றம் ஏற்பாடு செய்துள்ள இந்தக் கருத்தரங்கில் '21 ஆம் நூற்றாண்டில் உலகளாவிய ரீதியில் இந்துமதம்' என்ற பொருளில் ஆய்வு இடம்பெறவுள்ளது. பலர் உரை நிகழ்த்த இருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் இந்தக் கருத்தரங்கிற்கு அழைக்கப்பட்டுள்ளார். அங்கு அவர் சொற்பொழிவாற்றுவார். (ஐ)

## விளையாட்டு போட்டி

சண்டிலிப்பாய்,பெப்.17

சுழிபுரம் ஆறுமுக வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி, எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை பிறபகல் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ஐ-135)

## சேவைக்காலப் பயிற்சி

நவீன முகாமைத்துவம் தொடர்பான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு ஒன்று இம்மாதம் 28ஆம் திகதியும் மார்ச் மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளிலும் மானிப்பாய் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகள் மற்றும் நகரசபைகள் போன்றவற்றில் கடமைபுரியும் செயலாளர்கள், உதவிச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி உதவியாளர்கள் இப்பயிற்சிநெறியில் கலந்து கொள்வர்.

பயிற்சி வழங்குவதற்காக அரசாங்க நிர்வாகசேவை அதிகாரிகள் பத்துப் பேரைக்கொண்ட குழுவினர் கொழும்பிலிருந்து வருகைதரவுள்ளனர். (எ-152)

எமது புதிய
வீடியோ CD வெளியீடு
விஜயசாந்தியின்
உறவுக்கு நிறமில்லை
(பிரதிகள் உடன் பெறலாம்)
ITN
பலாலி வீதி,
பரமேஸ்வரா சந்தி.
(14614)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பொறியியலாளராக கடமையாற்றும் 30வயதுடைய 12இல் செவ்வாய், உத்தராடம் 4ஆம் பாதம் மணமகனுக்கு மெல்லிய தோற்றமுள்ள, அழகிய, குடும்பப் பாங்கான மணப்பெண்ணை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

படம், T.P. மற்றும்
முழு விவரங்களுடன்
உடன்தொடர்பு கொள்ளவும்.
விளம்பர இல. :- 1786
C/o - உதயன்.
(14615)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

தங்க ஆபரணம் ஒன்று
14.02.2003 வெள்ளிக்கிழமை
குறிகாட்டுவான் ஜெற்றியடியில்
கண்டெடுக்கப்பட்டது.
ஆதாரத்துடன்
தொடர்புகொள்ளவும்.
விநாயகர் அரிவு ஆலை,
மடத்துப்பிள்ளையார் கோவிலடி.
தொல்புரம் கிழக்கு.
சுழிபுரம். (14608)

## தவறிவிட்டன!

பேரானந்தம் ருசேந்திரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (842161568V), விசேட அ.அட்டை, பாடசாலை அ.அட்டை என்பன கொக்குவில் வீதி, ஆனைக்கோட்டை எனும் இடத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

க.பேரானந்தம்
உடுவில் தெற்கு,
புதுமடம்,மானிப்பாய்.
(14617)

## தவறிவிட்டன!

வ.சபாபதி என்பவரின் இரண்டு அல்பங்கள் யாழ். மருத்துவ பீடத்துக்கும் கோண்டாவில் அரசடிப் பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் (01.02.2003 திகதியளவில்) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கோண்டாவில் சந்தி, தில்லையம்பதி தொலைத் தொடர்புசேவை நிலையத்தில் ஒப்படைக்கவும்.

T.P- 021-2488 (14602)

## மரண அறிவித்தல்கள்

### செல்வி ஸாரங்கி ரஜீந்திரன்

*(யாழ்.சுண்டுக்குழி மகளிர் கல்லூரி 6ஆம் ஆண்டு மாணவி)*

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி ஸாரங்கி ரஜீந்திரன் நேற்று (16.02.2003) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பிரபல நாதஸ்வர வித்துவான் ரஜீந்திரன் - வாஸஸ்பதி (சங்கீத ஆசிரியை, யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி) தம்பதிகளின் அருமை மகளும் சுரஸாகித்தியனின் (யாழ்.பரியோவான் கல்லூரி 8ஆம் ஆண்டு மாணவன்) அன்புத் தங்கையும் பிரபல நாதஸ்வர வித்துவான் 'கலாபூஷணம்' பி.எஸ்.பிச்சையப்பா - காலஞ்சென்ற சரோஜா தம்பதிகளினதும் குமாரசுந்தரம் - பாலாம்பிகை தம்பதிகளினதும் அன்புப் பேர்த்தியும் ரவீந்திரன் - கமலாவின் பெறாமகளும் ராஜன் - பிறேமா, அமரர் மகேந்திரன் - தேவி, கண்ணன் - வனஜா ஆகியோரின் அன்பு மருமகளும் ராகசுதன், தரங்கிணி ஆகியோரின் சகோதரியும் தீபா, ஜனா, பிரியா, தர்ஷன், ஸப்தன், தணிகன் ஆகியோரின் மைத்துனியும் தங்கபாபு, வதனி, ரஞ்சனி, தர்மவதி (ஆஸ்திரேலியா), ஹேமவதி, நீதிமதி ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 259,பருத்தித்துறை வீதி, நல்லூர் என்ற முகவரியில் இன்று (17.02.2003) திங்கட்கிழமை நடைபெற்று, மாலை 4 மணியளவில் பூதவுடல் செம்மணி மயானத்திற்கு எடுத்துசசெல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினா, நணபர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*259,பருத்தித்துறை வீதி,*
*நலலூர்.* (14609)
தகவல்:
P.ரஜீந்திரன்
(நாதஸ்வரம்)

### திருமதி மார்க்கண்டு செல்லம்மா

இளவாலை, கல்லூரி வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மார்க்கண்டு செல்லம்மா 14.02.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கதிரேசு - வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகளும் சின்னத்தம்பி மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியும் சுப்பிரமணியம், கமலாதேவி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கேதீஸ்வரன் (கனடா), சாந்தீஸ்வரன், யோகேஸ்வரன் (கனடா), ரமேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் அஜந்தா (கனடா), சோபனா, கலைபரசி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுரேன், சஞ்சய், ஜெனோத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (17.02.2003) திங்கட்கிழமை பி.ப.4 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சின்னத்தம்பி மார்க்கண்டு,*
*கல்லூரி வீதி, இளவாலை.* (14612)
தகவல்:
க.சுப்பிரமணியம் (சகோதரர்).

### திருமதி மகாலஷ்மி நடேசபிள்ளை

*(கம்பர்மலை, வல்வெட்டித்துறை)*

யாழ்ப்பாணம், சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் கம்பர்மலையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகாலஷ்மி நடேசபிள்ளை அவர்கள் 13.02.2003 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் கம்பர்மலையைச் சேர்ந்த நடேசபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் லண்டனில் வசிக்கும் சுதாகரன், கமலாகரன் ஆகியோரின் அன்புத்தாயாரும் திருமதி சுபாஜினி சுதாகரன் அவர்களின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் - தங்கம்மா தம்பதியினரின் மூத்த மகளும் காலஞ்சென்ற திரு. திருமதி கந்தையா தமபதியினரின் மருமகளும் மகேந்திரலிங்கம் (கொழும்பு), திருமதி மகாதேவி கணேசகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் திருமதி சரஸ்வதி வைத்திலிங்கம் (கம்பர்மலை), ஆறுமுகவடிவேல் (கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2003) திங்கட்கிழமை மதியம கம்பர்மலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மயிலியதனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
*தொலைபேசி: 020 88417806* கணவர் (கம்பர்மலை),
*கைத்தொலைபேசி: 079 51958492* பிள்ளைகள், மருமகள் (லண்டன்)
(14-365821)

### திருமதி மங்கையர்க்கரசி செல்லத்துரை

யாழ்ப்பாணம், இல.64/4, பருத்தித்துறை வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மங்கையர்க்கரசி செல்லத்துரை 13.02.2003 வியாழக்கிழமை அன்று ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும மாலினி, நளினி ஆகியோரின் அன்புத் தாயாரும் கமலினியின் அன்புப் பெரியம்மாவும் காலஞ்சென்ற நவரத்தினராசா, பராமோகன் ஆகியோரின் அன்பு மாமியாரும் நவநீதன், சரண் ஆகியோரின் பேர்த்தியாரும் காலஞ்சென்ற பூலோகநாயகி மற்றும் கைலாயநாயகி, செல்வரத்தினம், ரட்ணதுரை ஆகியோரின் அருமைச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2003) திங்கட்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*66/2, பருத்தித்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (14605)
தகவல்:
ஜெ.கலாரஜனி

### நாகலிங்கம் இராமநாதன்

வீமன்காமம் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 32 1/1, பாமன்கடை ஒழுங்கையை வதிவிடமாகக் கொண்டவரும் மகாஜனாக் கல்லூரி இளைப்பாறிய ஆசிரியருமாகிய நாகலிங்கம் இராமநாதன் 15.02.2003 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நாகலிங்கம் - பொன்னுப்பிள்ளையின் புத்திரனும் வைரமுத்து - சௌந்தரத்தின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் கனகலிங்கம், நடராசா, அம்பிகைபாகன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் Dr.குலோத்துங்கன் இளங்கோ, இரவீந்திரநாதன், Dr.நரேந்திரநாதன், காலஞ்சென்ற மகேந்திரநாதன் மற்றும் கஜேந்திரநாதன், சுபத்திரா விஜயலக்குமி, சுசீலா ஸ்ரீலக்குமி, சுகுணா வரதலக்குமி ஆகியோரின் அன்புத் தந்தையும் சோபிதமணி, விஜயராணி, மன்மதகுமாரி, வாசுகி, முருகேந்திரன் ஆகியோரின் மாமனாரும் மதிபூஷணன், மதிவதனன், சாருகேசி, திலீபன், குமரன், கோபி, கம்ஷானந்தி, நிமலன், முரளி, கோபி, ஜனகன், போத மாதவன், வாமனன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2003) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் கொழும்பு பாமன்கடை இல்லத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொழும்பு முகவரி:*
*No: 32 1/1, பாமன்கடை லேன்,*
*வெள்ளவத்தை.*
*Phone No: 01-366452* (14604)
தகவல்:
சகோதரன் -நா.அம்பிகைபாகன்
*(கோண்டாவில்),*
மைத்துனர் - Dr. வ.சிவராசா
*(கொக்குவில்).*

## மருதடி விநாயகர் மரக்காலை

எம்மிடம் மரப்பலகை வகைகள்

முதிரைப் பலகை - 12", 14" .........26"வரை
வேம்பு பலகை - 12", 14" .........24"வரை
முதிரை தீராந்தி - 4X3
பாலை, வேம்பு - தீராந்தி - 4X3, 5X4, 6X4, 8X4,5X2, 6X2

வேம்பு, தேக்கு, மருது, வாகை ஆகிய மரங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

மருதடி விநாயகர் மரக்காலை,
ஆலடிச்சந்தி,
மானிப்பாய்.

தொ.பே.இல.: 077 - 7176338
(14594)


## கண்ணீர் அஞ்சலி



### கார்த்திகேசு கிருஷ்ணர்
*(கட்டட ஒப்பந்தகாரர்)*

15.02.2003 சனிக்கிழமை இயற்கையெய்திய கட்டட ஒப்பந்தகாரர் கார்த்திகேசு கிருஷ்ணர் அவர்களின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தவர்களுக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

*இணுவில் மேற்கு.* (14602) - உறவினர்கள்.

## மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்

உடுவில் கமநல சேவைக்குழு உறுப்பினரும்
வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவில்
உதவித் திட்டமிடல் அதிகாரியாகக்
கடமையாற்றியவருமான

### திரு.க.தேவராஜன்

அவர்கள் வலி.தெற்கு உதவிப் பிரதேசச் செயலராகப் பதவி உயர்வு பெற்று, சேவை புரிந்து வருகிறார். இவரது சேவை மேன்மேலும் உயர வேண்டுமென மனதார வாழ்த்துகிறோம்.

*கமநல சேவைகள் நிலையம்,*
*உடுவில்.* (14596)
கமநல சேவைக் குழு
நிலைய உத்தியோகத்தர்கள்.

## நீர் இறைக்கும் இயந்திரங்கள் திருட்டு

தென்மராட்சி,பெப்.17

ஒரே வீதியில் உள்ள வீடுகளின் கிணற்றில் வைக்கப்பட்டிருந்த நீர் இறைக்கும் இயந்திரங்கள் இனந் தெரியாதோரால் அபகரிக்கப்பட்ட சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரி, தாமோதரம்பிள்ளை வீதியில் இடம்பெற்றுள்ளது. இதே வீதியில் வசிக்கும் குடும்பஸ்தர்கள் இருவரின் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரங்களே இவ்வாறு திருடப்பட்டுள்ளன. இத்திருட்டுத் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-117)

## திருகோணமலை பெற்றோலிய தாங்கிகள் இந்தியா வசம்

கொழும்பு,பெப்.17

திருகோணமலை சீனக்குடாவில் உள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான 102 பாரிய தாங்கிகளை இந்திய பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு குத்தகைக்கு வழங்கும் நிகழ்வு சீனக்குடாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதையடுத்து பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சீனக்குடா அலுவலகத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

தமது தொழில் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு கோரி அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-3)


## தேவை

கௌரவமான குடும்பமொன்றுக்கு தங்கியிருந்து சமையல் செய்து ஒத்தாசையுடன் செயற்படக்கூடிய 40 வயதிற்கு மேற்பட்ட பெண்மணி தேவை. வெள்ளிக்கிழமைக்கு முன்பு (21.02.2003) நேரில் வரவும்.

தொடர்பு: M.சுரேஸ்குமார்
6/12, விதானையார் வீதி,
(14597) சுண்டுக்குளி.


## புதிய உயர் கல்லூரி
### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1 ஆம் பரிசு - 3551
2 ஆம் பரிசு - 5216
3 ஆம் பரிசு - 1603

ஆறுதல் பரிசுகள்:
4359,1464, 3484, 1496, 4896, 0178, 3762, 0852, 4436, 5084.

09.03.2003 இற்கு முன்னர் வரும் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் தமக்குரிய பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியம்,
(14601) புதிய உயர் கல்லூரி.

## மரண அறிவித்தல்கள்

### கதிரவேலு நடராசா

இணுவில் மேற்கைச் சேர்ந்த கதிரவேலு நடராசா நேற்றுமுன்தினம் (15.02.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - வேதாம்சத்தின் அன்பு மகனும் சிவகாமிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - ஆச்சியம்மாவின் அன்பு மருமகனும் சச்சிதானந்தம் (P.H.I), இளமதி (ஆசிரியை), பவன் (ஆசிரியர்), சிவசோதி (S.D.O), கௌரி (S.D.T), காலஞ்சென்ற ஐங்கரன் (தேவர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வாசுகி (ஆசிரியர்), பாலகௌரி (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிமலினியின் அன்புப் பேரனும் வள்ளியம்மை, முத்துப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, சிவசுப்பிரமணியம், நல்லம்மா, இராமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2003) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மன்னன்தோட்டம்,*
*இணுவில் மேற்கு.* (14598)
தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### கார்த்திகேசு கிருஷ்ணர் *(கட்டட ஒப்பந்தகாரர்)*

இணுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட கார்த்திகேசு கிருஷ்ணர் நேற்றுமுன்தினம் (15.02.2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - லக்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் பாக்கியலட்சுமி அவர்களின் அருமைக்கணவரும் பிரபாகரன் (கனடா) அவர்களின் பாசமிகு தந்தையாரும் பவளரத்தினம் அவர்களின் அன்புச் சகோதரனும் சாந்தமலர் (வவா) அவர்களின் பெரியப்பாவும் புஷ்பரதி (கனடா), புஷ்பராஜா, புஸ்பரஜனி, புஸ்பவதனி ஆகியோரின் அன்பு மாமனாரும் மார்க்கண்டு (ஓட்டுமடம்) அவர்களின் மைத்துனரும் கார்த்திலா (கனடா), டெனிலா (கனடா), ஹரோன், டனுசிகா ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (17.02.2003) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"சரவணம்"*
*இணுவில் மேற்கு, இணுவில்.*
தகவல்:
திருமதி பாக்கியலட்சுமி (மனைவி),
பிரபாகரன் (மகன் - கனடா). (14600)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| சீட்டிழுப்பு வாரம் | 449 |
|---|---|
| திகதி | 14.02.2003 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல.
5739138-5753556

வெற்றி இலக்கங்கள் **14 33 47 50**

லக்கினம்
கடகம்



ஜக்பொட் பரிசு
ரூபா. 1,000,000/-
வெல்லப்பட்டுள்ளது.

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,000,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 315,720 | 10 | 3,157,200 |
| 2 இலக்கங்கள் | 29,076 | 20 | 581,520 |
| 1 இல+ லக்கினம் | 28,940 | 30 | 868,200 |
| 2 இல+ லக்கினம் | 2,580 | 100 | 258,000 |
| 3 இலக்கங்கள் | 766 | 500 | 383,000 |
| 3 இல+ லக்கினம் | 72 | 5,000 | 360,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 1,000,000 | 1,000,000 |
| மொத்தம் | 377,158 | - | 6,907,920 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,907,920/-

தொடர் இல. 4761302க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 பெப்ரவரி 18ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5748201-8-08
5747888-1-08
5741418-1-13
5750487-0-34
5752778-2-08

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3419713 இருந்து
3438127 வரை
சீட்டிழுப்பு இல. 1376
திகதி 15.02.2003

வெற்றி எண்கள் **01 14 24 32 42**
போனஸ் எண் **28**

ஜக்பொட் பரிசு
ரூபா.1,500,000/- வெல்லப்பட்டது.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 1,500,000/- | 1,500,000/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 113 | 10,000/- | 1,130,000/- |
| 3 | 5,869 | 500/- | 2,934,500/- |
| 2 | 96,884 | 20/- | 1,937,680/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 01ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 118,664 | 10/- | 1,186,640/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா 8,888,820/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா. 1,500,000/-

தொடர் இல. 2439402க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 பெப்ரவரி 19ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3435833-8-99
3438101-8-03
3427463-1-35
3423736-8-71
3425438-3-59

## வெங்காயத்தின் விலை தீவுப் பகுதியில் வீழ்ச்சி

ஊர்காவற்றுறை,பெப்.17

தீவுப் பகுதிகளில் தற்பொழுது வெங்காய அறுவடை நடைபெற்று வருவதால் வெங்காயத்தின் விலை வீழ்ச்சி அடைந்து வருகிறது.

உள்ளூர் சந்தைகளில் ஒரு கிலோ கிராம் வெங்காயம் 20 ரூபா முதல் 25 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் -

ஆனால், வியாபாரிகள் ஒரு கிலோகிராம் வெங்காயத்தை பத்து ரூபாவுக்கே கொள்வனவு செய்ய முன் வருகின்றனர் என்றும் - விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் உரம், கிருமிநாசினிகள், களை பிடுங்குதல், கூலிகளை பல்வேறு செலவுகளை மேற்கொண்டும், இந்த விலையில் வெங்காயத்தை விற்பதனால் தமது முதலையே மீள முடியாத அளவு ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

அதேவேளை -

யாழ்ப்பாணம், திருநெல்வேலி சந்தைகளுக்கு வெங்காயத்தை எடுத்துச்சென்றாலும் ஏற்றி இறக்கல் கூலி போக தேறும் வருமானத்தையும் பார்க்கும் போது தீவகத்திலேயே விற்பனை செய்து விடலாம் என அவர்கள் தெரிவித்தனர்.

தென்னிலங்கைக்கு வெங்காயம் அனுப்பபப்பட்டுவருவதால் அறுவடையின் போது நியாயமான வருமானம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பிலேயே தாங்கள் வெங்காய பயிர் செய்கையில் ஈடுபட்டதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

(எ-16)

## செய்தியாளர் தாக்கப்பட்டமைக்கு திருமலை ஊடகவியலாளர் கண்டனம்

திருகோணமலை,செப்.17

மானிப்பாயில் பெண் போராளிகள் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற இரு தமிழ் ஊடகவியலாளர்கள் மீது, படையினர் நடத்திய தாக்குதலை திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இச்சம்பவம் குறித்து திருமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் சார்பில், அதன் செயலாளர் அ.பரசுராமன் கண்டன அறிக்கை ஒன்றை விடுத்ததுடன், மேற்படி ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் குறித்து சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யப்படவேண்டும் என சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு சங்கம் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளது.

ஊடகத்துறை சுதந்திரம் முழுமையாக வழங்கப்பட்டுள்ளதாக அரசு கூறிக்கொண்டாலும், யாழ். 'தினக்குரல்' செய்தியாளர் எஸ்.சிவபாலன், 'ஈழநாடு' செய்தியாளர் மனோகரன் பாலன் ஆகியோர் தமது அடையாள அட்டைகளைக் காட்டி, ஆளடையாளத்தை படையினருக்கு நிரூபித்த பின்னரும் தாக்கப்பட்டுள்ளனர்.

சம்பவமொன்று நடைபெற்றால் ஸ்தலத்திற்குச்சென்று உண்மை நிலையை உலகறியச் செய்யும், உரிமை ஊடகவியலாளர்களுக்கு உள்ளது. அத்தகைய உரிமையை மறுக்கும் வகையில் படையினர் நடந்துகொள்கின்றார்கள்.

இத்தகைய மிலேச்சத்தனமான சம்பவங்கள் ஊடகவியலாளர் தொடர்பில், இனி மேலும் நடைபெறாவண்ணம் அரசும், ஊடகத்துறை மற்றும் பாதுகாப்பு அமைச்சுகளும் உருப்படியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-290)

## அனலைதீவில் சிறுவன் மீது பாலியல் துன்புறுத்தல்

ஊர்காவற்றுறை,பெப்.17

அனலைதீவில் 12 வயதுச் சிறுவன் ஒருவன் மிருகத்தனமான முறையில் இளைஞன் ஒருவனால் ஓரினச் சேர்க்கைக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக சிறுவனின் பெற்றோர் கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களிடம் முறைப்பாடு செய்துள்ளனர். மேற்படி சிறுவன் வைத்திய சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். உடல், உளரீதியாக இச்சிறுவன் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

18 வயதுடைய இளைஞன் ஒருவனே மேற்படி சிறுவனை பலாத்காரமான முறையில் ஓரினச்சேர்க்கைக்கு உட்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதுதொடர்பாக அப்பகுதி கிராம சேவை அலுவலரிடமும் சிறுவனின் பெற்றோரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து கலாசாரத்தைப் பேணும் இளைஞர்கள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஒ-16)

## செயலகத்துக்கு சமுகமளிக்குமாறு அழைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.17

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலர்களையும், திட்டமிடல உதவிப்பணிப்பாளர்களையும் இன்று காலை 10 மணிக்கு யாழ்.செயலகத்துக்கு சமுகமளிக்குமாறு திட்டமிடல பணிப்பாளர் பு. சுந்தரம்பிள்ளை கேட்டுள்ளார்.

முக்கிய விடயம் தொடர்பாக இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(எ)

## உழுத்துப்போன...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

குரிய சந்தர்ப்பத்தை தடுப்பதாக கூறியிருக்கிறீர்கள்.

விடுதலைப் போராட்டம் வீரியம் பெற்றுள்ள வேங்கைகளின் காலத்தில் எப்பவோ உக்கி, உழுத்து, செத்துப்போன படுபிற்போக்குத்தனமான சாதிப் பிரச்சினையை இப்போதும் விட்டுவிடத் தாங்கள் தயாராகவில்லை என்பதையே இது காட்டுகின்றது. எனவே, மக்கள் மறந்துபோன ஒன்றை நீங்கள் மீளக் கிளறுவது எதற்காக? தங்களது சுய அரசியல் இலாபத்துக்காகவே அன்றி வேறெதற்குமல்ல.

நூலகத் திறப்பு விழாவை பிற்போடும்படி நாம் கோரியிருந்தது பிற்போக்குத்தனமான சிந்தனையில் நின்று அல்ல என்பதை தெளிவுபடுத்துகின்றோம்.

மேலும் நாம் கோரியிருந்த நூலக பௌதிக வளங்கள் என்பது குளிரூட்டியும், மின்னுயர்த்திகளும் அல்ல. தொடர்ச்சியாக அந்த வசதிகளில் மூழ்கிப்போயிருக்கும் தாங்கள் அந்த நினைவுகளோடு இருப்பது ஒன்றும் ஆச்சரியப்படும் விடயமல்ல.

நாம் கேட்ட வசதி, வாய்ப்பு என்பது காத்திரமான நூல்களும் நவீன தொழில்நுட்ப தகவல் தொடர்பு வசதிகளும்(இணையத்தள வசதி) போன்ற இன்றைய நவீன உலக ஓட்டத்திற்கு ஏற்றவை என்பதை தங்களுக்கு தெளிவாக்க விரும்புகின்றோம். இந்த வசதிகளை தமிழர்களாகிய நாம் அனுபவித்து உயர்வது தவறென்று நீங்கள் கருதுகின்றீர்களா?

தமிழ்ச் சிறார்கள் மர நிழலிலும், புழுதித் தரையிலும், குப்பிவிளக்கிலும் எவ்வித வசதிகளுமின்றி கல்வி கற்பதை வன்னியைப் பார்த்து வந்த மக்கள் பிரதிநிதிகள் ஏன் அறியவில்லை என வினா எழுப்புகிறீர்கள். பாராட்டுகின்றோம். இந்தளவு அவலச் சூழ்நிலையில் வன்னிச் சிறார்கள் கல்வியைத் தொடர்கிறார்கள் என்பதை இப்போதாவது தாங்கள் அறிந்திருப்பது கண்டு ஆச்சரியப்படுகின்றோம்.

நூலகத் திறப்பு விழாவை யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் பொது அமைப்புகளோடு, யாழ். நூலகக் குழு மற்றும் கட்டடத் திணைக்களம் போன்றனவும் எதிர்த்ததன் காரணம் நூலகம் திறப்பதற்கு எதிர்த்தோ அல்லது நூலகம் தேவை இல்லை என்பதோ அல்ல. நாங்கள் எல்லோரும் எதிர்பார்ப்பது முழுமை நிறைந்த நூலகத்தைத்தான் என்பதைத் தாங்கள் புரிந்து கொள்ளவேண்டும். தங்களின் அறிக்கையையிட்டு கொதிப்படைந்துள்ள மக்கள் முன் தாங்கள் இனி எப்படி முகம் கொடுக்கப்போகிறீர்கள் என்பதே எமக்கு இப்போது எழுந்துள்ள கேள்வியாகும் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஒ-எ)


# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

தினம் ஒரு பரிசு - 10

நாளை (18.02.2003) இடம்பெறவுள்ள மேற்கிந்திய - பங்களாதேஷ் ஆட்டத்தில் வெல்லப்போவது யார்?

முழுப்பெயர் : ....................

முகவரி : ....................

அ. அட்டை எண்: ....................

இக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (18.02.2003) நண்பகல் 1மணிக்குள் தினம் ஒரு பரிசு - 10, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.

உதயன்



உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

Super Six பரிசுகள்

இம்முறை சுப்பர் சிக்ஸ் பிரிவுக்குள் நுழையக்கூடிய அணிகள் எவை?

1. .................... 2. ....................

3. .................... 4. ....................

5. .................... 6. ....................

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். முடிவு திகதி: பெப்ரவரி 28

முழுப்பெயர் : ....................

முகவரி : ....................

அ. அட்டை எண்: ....................

முதற் பரிசு மைக்கிறோ பிசி தரும் கணனி

விசேட பரிசுகள் அருணஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டின் கூப்பன்கள்



2ஆம் பரிசு சிங்கர் நிறுவனம் தரும் தொலைக்காட்சி



SuperSix பரிசு லுமாலா நிறுவனம் தரும் சைக்கிள்கள்

ஆறுதல் பரிசுகள் எக்ஸ்போ நிறுவனம் தரும் விமான ரிக்கெட்டுக்கள்

3ஆம் பரிசு ஷார்ப் நிறுவனம் தரும் வானொலி

தினம் தினம் ஒரு பரிசு ஏசியன் நிறுவனம் தரும் கழிவுக் கூப்பன்கள்

உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

மாபெரும் இறுதிப் போட்டி

1. இறுதியில் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது? (....................)

2. இறுதியாட்டத்தின் ஆட்டநாயகன் யார்? (....................)

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். முடிவு திகதி: மார்ச் 15

முழுப்பெயர் : ....................

முகவரி : ....................

அ. அட்டை எண்: ....................

**தினம் தினம் ஒரு பரிசு:**

ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல் நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம வழங்கும் 1000ரூபாவுக்கான 50கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**

முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருண்ஸ் ஸ்போட்ஸ் பொட் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**Super Six பரிசுகள்:**

Super Six இற்கான சரியான அணிகளைத் தெரிவுசெய்யும் மூவருக்கு லுமாலா நிறுவனம் வழங்கும் புத்தம் புதிய சைக்கிள்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி இம்மாதம் 28ஆகும்.

**மாபெரும் இறுதிப் போட்டி:**

இது பெரும் பரிசுகளைக் கொண்டது. வெல்லும் 3 அதிர்ஷ்டசாலிகள் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளைப் பெறுவர். ஆறுதல் பரிசுகளாக 10 இருவழி விமானப் பயண ரிக்கெட்டுக்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி மார்ச் 15 ஆகும்.

**விதிகள்:-**

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம், போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா, அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம், உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது, முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.

# மீளுமா இந்தியா...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)
களங்கள் பந்துவீச்சுக்கு சாதகமாக மாறிவிடுகின்றன. இந்நிலையில், இந்திய - ஆஸ்திரேலிய ஆட்டம் செஞ்சூரியனில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதன் துடுப்பாளர் வரிசைப் பலம், ஓட்டங்கள் குவியப்போகின்றன என்று எண்ண வைத்தது. இந்த ஆட்டத்தில் நீக்கப்படுவார் என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்த கைவ், என்ன காரணத்தாலோ அன்றைய ஆட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார். களமிறங்கியவர்கள் அனுபவம்மிக்க அணித் தலைவரும் அதிரடி ஆட்டக்காரருமான சௌரவ் கங்குலியும் அதிரடி ஆட்ட நாயகன் சச்சின் டெண்டுல்கரும். இருவரிடமும் இருந்து எதிர்பார்க்கப்பட்டது அதிரடி விளாசல்கள். மைதானம் இந்திய ரசிகர்களால் நிறைந்திருந்தது. முதல் ஓவர் பந்து வீசியவர் மெக்ராத் இரண்டாவது ஓவரை வழமையாக வீசுபவர் ஜிலெஸ்பி. மாறாகப் பந்து வீச வந்தவர் வேகப் புயல் பிரெட் லீ. புதிய பந்தில் இவர் வீசுவது வெகுகுறைவு. ஆரம்ப ஓவர்களில் ஓட்டங்களைப் பெற இந்திய ஜாம்பவான்கள் தடுமாறினர். பந்துகள் களத்தில் வீழ்ந்து எகிறி வந்தன. அடித் தாடுவது ஆபத்து என்பதால் தடுத்தாடிக்கொண்டிருந்தனர். ஆறாவது ஓவர் லீயின் ஓவர் நான்காவது பந்து, வலதுஇலக்கில் இருந்து மிக வெளியே விழுந்து விலகிச் சென்றது பந்து. உடலில் இருந்து நன்றாக வெளியே விலக்கி மட்டையை குறுக்கே நீட்டி, எட்டி ஆடினார் கங்குலி. பந்து மட்டையின் விளிம்பை ஒரு முறை கொஞ்சி விட்டு பின்னால் கில்கிறிஸ்டிடம் சரணடைந்தது. 22 ஓட்டங்களுக்குள் முதல் விக்கெட் இழப்பு.

அடுத்து வந்தவர் இளம் அதிரடி நாயகன் ஷேவாக். மகிழ்ச்சி தரும் விதத்தில் அடித்தாடுவார் என்று காத்திருந்தனர் இந்திய ரசிகர்கள். அவர் வந்ததும் எதிர்கொண்ட முதல் பந்திலேயே அடித்தார் ஒரு பௌண்டரி. அப்போ கொண்டாட்டம்தான் என்று காத்திருந்த ரசிகர்களுக்கு அதிர்ச்சி. அவர் அன்று முழுவதும் அடித்ததே அவ்வளவுதான். ஷேவாக் வந்ததும் டெண்டுல்கர் வீழ கொண்டு மக்ராத்தின் ஓவர் ஒன்றில் விளாசினார். அதில் மட்டும் 14 ஓட்டங்கள் வந்தன. ஆனால், அதற்கு அடுத்த ஓவரிலேயே, கங்குலி ஆட்டமிழந்த அதேமுறையில் ஆட்டமிழந்தார் ஷேவாக். வீசியவர் மீண்டும் லீ. 41 ஓட்டங்களுக்குள் 2 விக்கெட் இழப்பு. அதிரடி நாயகர்கள் இருவரைத் தொடர்ந்து இழந்ததும் பயந்து ஒடுங்கிப் போனது இந்தியா. ஆஸி. வேகப் புயல்களுக்கு இது சாதகமானது. இன்னும் விறுகொண்டு வீசினர். அதிரடியாக ஆடமுற்பட்ட டெண்டுல்கரும் தன் மட்டையை சுருட்டிக்கொண்டார். அடுத்து வந்தவர் திராவிட். வந்தது முதல் ஓட்டமே எடுக்காமல் நின்று கொண்டிருந்தார். விக்கெட்டுக்கள் சரியாமல் காப்பது ஒன்றுதான் இப்போதைக்கு உன்னனி என்று அவருக்கு யாரும் சொன்னார்களோ என்னவோ? 23 பந்துகளைச் சந்தித்து அவர் பெற்றதோ ஒரே ஒரு ஓட்டம் மட்டுமே. அதற்கு இடையில் லீயின் பந்தில் ஆட்டமிழக்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கினார். ஆனால், 'சிலிப்பீல்' நின்ற மார்ட்டின் அதனைத் தவறவிட்டார். பந்து வீச்சில் மாற்றம் செய்யப்பட்டது. லீக்குப் பதிலாக ஜிலெஸ்பி வந்தார். முதலாவது பந்து திராவிட்டுக்கு. வலது இலக்குக்கு மிக வெளியே சென்றது பந்து. ஆசை யாரை விட்டது? எட்டி அடிக்க முயன்றார். மட்டையின் சாய்வு சரியாக அமையவில்லை. பந்து மட்டையின் கீழ் விளிம்பில் பட்டு எகிறி விக்கெட்டைப் பதம் பார்த்தது. 44 ஓட்டங்களுக்குள் 3ஆவது விக்கெட்டைப் பறிகொடுத்தது இந்தியா. திணறிக் கொண்டிருந்த அணியை இளம் வீரர்களாவது தூக்கி நிறுத்துவார்களா?

எங்களாலும் முடியாது என்பது போன்று வந்து விட்டுத் திரும்பிப் போனார் யுவராஜ் சிங். 8 பந்துகளில் அவர் ஓட்டம் எதனையும் பெறவேயில்லை. மெக்ராத்தின் பந்தில் எல்.பி. டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார். 45 ஓட்டங்களுக்குள் 4 விக்கெட்டுக்கள் இழப்பு. மறுபுறத்தில் டெண்டுல்கர் நின்று கொண்டிருந்தார். தன் சகாக்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது புரியாமல் விழித்துக் கொண்டிருந்தார். அடுத்து வந்தவர் கைவ். அவரையும் நிற்க விடாமல் துரத்தியடித்தார் ஜிலெஸ்பி. ஓர் ஓட்டத்தைப் பெற்ற நிலையில், சைமன்ஸிடம் பிடிகொடுத்து, வந்த வேகத்தில் 'பெவிலியனு'க்குத் திரும்பினார் கைவ். அவருக்குப் பதிலாக வந்தவர் மொங்கியா. டெண்டுல்கருடன் இணைந்தார். ஆனால், ஒரு புறத்தில் நிலையாக நின்று கொண்டிருந்த டெண்டுல்கர் சற்றே நிலைதடுமாறினார். ஜிலெஸ்பியின் வேகங் குறைந்த பந்தை சரியாகக் கணிக்கவில்லை அவர். விக்கெட்டின் குறுக்கே சென்று ஆட முயன்றார். பந்து வேகங் குறைந்து, அவர் காலைத் தட்டிச் சென்றது. எல்.பி.டபிள்யூ என்று தெளிவாகச் சொல்லிவிட்டார் நடுவர். 53 பந்துகளில் 3 பௌண்டரிகள் உட்பட 36 ஓட்டங்களைப் பெற்றிருந்தார் அவர். இப்போது 78 ஓட்டங்களுக்குள் 6 விக்கெட்டுக்கள் இழப்பு. இந்தியாவின் பலம்மிக்க துடுப்பாட்ட வரிசை தகர்க்கப்பட்டு விட்டது. திணறிக்கொண்டிருந்த இந்தியா 100 ஓட்டங்களையாவது தாண்டுமா என்ற கேவலமான நிலைக்குத் தள்ளப்பட்டது. டெண்டுலகர் வெளியேறிய கொஞ்ச நேரத்திலே மொங்கியாவை 'பெவிலியனு'க்குத் திருப்பினார் லீ. 80 ஓட்டங்களுக்கு 7 விக்கெட் இழப்பு. இருப்பதோ முழு நேரப் பந்துவீச்சாளர்களின் விக்கெட்டுக்கள் மட்டுமே. ஆனால், துடுப்பாளர்களைவிட அவர்கள் நன்றாகவே ஆடினார்கள். கும்ளேயும் ஹர்பஜனும் இணைந்து 44 ஓட்டங்களைப் பெற்றனர். ஹர்பஜன் 32 பந்துகளில் 4பௌண்டரிகள் ஒரு சிக்ஸரை விளாசி 28 ஓட்டங்களைக் குவித்தார். கும்ளே 38 பந்துகளில் 16 ஓட்டங்களைப் பெற்றார். கடைசி விக்கெட் ஸ்ரீநாத்தினுடையது. ஓட்டம் பெற அவர் முயல டெரன் லீமனால் அற்புதமாக 'ரன் அவுட்' செய்யப்பட்டார். இலங்கையுடனான வி.பி. கிண்ண ஆட்டத்தில் இனவாதமாகத் திட்டினார் என்பதனால் 5 ஆட்டங்களில் ஆடத் தடை விதிக்கப்பட்டிருந்த லீமன், அதன் பின்னர் விளையாடிய முதல் ஆட்டம் இது. 41.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து வெறும் 125 ஓட்டங்களை மட்டும் பெற்றது இந்தியா.

ஆஸ்திரேலிய வேகப் புயல்களின் சூறாவளியில் சிக்கி சின்னாபின்னமாகிப்போய் நின்றது இந்தியா. 3 'மெய்டின்'களுடன் 8 ஓவர்களை வீசினார் மெக்ராத். கொடுத்ததோ 23 ஓட்டங்கள் மட்டும். பெற்றது ஒரு விக்கெட். ஒரு 'மெய்டினு'டன் 9 ஓவர்கள் வீசிய லீ, 36 ஓட்டங்களை மட்டும் கொடுத்து முக்கிய 3 விக்கெட்டுக்களைத் தகர்த்தார். எல்லோருக்கும் மேலே 10 ஓவர்களை வீசி வெறும் 13 ஓட்டங்களை மட்டும் கொடுத்து, 3 விக்கெட்டுக்களை சரித்தார் ஜிலெஸ்பி. அவற்றில் இரண்டு 'மெய்டின்' ஓவர்கள்.

இந்தியர்கள் இவ்வளவு மோசமாக ஆடுவார்கள் என்று யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. ஆனாலும் அவர்கள் அப்படி ஆடினார்கள். உலகக் கிண்ணப் போட்டிகளில் இந்திய அணி பெற்ற மிகக் குறைந்த ஓட்டங்கள் என்ற சாதனையை(?)யும் அவர்கள் செய்தார்கள்.

(நேற்றைய உதயனில் வெளியான செய்தியில் உலகக் கிண்ண போட்டிகளில் இந்திய அணிபெற்ற மிகக் குறைந்த ஓட்டங்கள் என்ற சாரப்பட வந்திருக்க வேண்டிய செய்தி, தவறுதலாக உலகக் கிண்ண போட்டிகளில் மிகக் குறைந்த ஓட்டங்களைப் பெற்ற அணி இந்தியா என்ற சாரப்பட தவறுதலாகப் பிரசுரமாகியுள்ளது. திருத்தி வாசிக்கவும். - ஆ-ர்)

பதிலுக்கு களமிறங்கிய ஆஸ்திரேலியர்களுக்கு 125 என்ன ஒரு சுண்டைக்காய் இலக்கு. விடுவார்களா அவர்கள். அடித்துக் கொளுத்தினார்கள். ஆரம்ப அதிரடி ஜோடி தொடக்கம் முதலே ஓட்டங்களைக் குவித்தது. பெறவேண்டியது ஓவருக்கு மூன்றிலும் குறைவான ஓட்டங்களே என்ற போதும், ஓவருக்கு 5 ஓட்டங்கள் என்ற சராசரியில் ஓட்டங்களைக் குவித்துக்கொண்டிருந்தனர். இந்திய வேகப் பந்துவீச்சாளர்கள் துவம்சம் செய்யப்பட்டனர். அதைப் பார்த்துப் பொறுக்காத கங்குலி 8 ஆவது ஓவர் முடிவில் சுழல் பந்துவீச்சாளர்களைத் தாக்குதலுக்குக் கொண்டு வந்தார். ஆனால், ஹர்பஜனாலும் கும்ளேயாலும் பெரிதாக ஒன்றையும் சாதிக்க முடியவில்லை. வேகமாக உயர்ந்து கொண்டிருந்த ஓட்டங்களைச் சிறிது கட்டுப்படுத்த மட்டும்தான் முடிந்தது. ஆஸி. வீரர்கள் சுழல்பந்துகளை எதிர்கொள்வதற்கு சிரமப்பட்டார்கள். எனினும், இடையிடையே பௌண்டரிகளையும் சிக்ஸர்களையும் விளாசினார்கள்.

ஓட்டங்கள் 100ஐ எட்டியபோது கில்கிறிஸ்டின் விக்கெட் வீழ்ந்தது. முன்னேறி வந்து ஆட முயன்றார் கில்கிறிஸ்ட். பந்து அவரை ஏய்த்து விட்டு காத்துநின்ற திராவிட்டிடம் ஓடிவிட்டது. பிடித்து ஆத்திரமெல்லாம் சேர்த்து ஒரே குத்து. விக்கெட்டுகள் தகர்ந்து பறந்தன. 61 பந்துகளில் 6 பௌண்டரிகளுடன் 48 ஓட்டங்களைக் குவித்தார். அடுத்து வந்த பொண்டிங்கும் ஹைடனும் இணைந்து வெற்றியை சுலபமாகப் பெற்றுக் கொண்டனர். 49 பந்துகளில் ஒரு பௌண்டரி, 2 சிக்ஸர்கள் சகிதம் 45 ஓட்டங்கள் குவித்தார் ஹைடன். 24 பந்துகளில் 4 பௌண்டரிகளுடன் 24 ஓட்டங்களை விளாசினார் பொண்டிங். 9 விக்கெட்டுக்களால் வென்றது ஆஸி. அணி. 2 'மெய்டின்'களுடன் 10 ஓவர்கள் வீசி வெறும் 13 ஓட்டங்களுக்குள் முக்கியமான மூன்று விக்கெட்டுக்களைத் தகர்த்த ஜிலெஸ்பி அன்றைய ஆட்டநாயகன்.

\- கனிமொழி.

## ஆவேசப் பந்து....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)
வழமையாக மெக்ராத், கிலெஸ்பி ஆகிய இருவருமே ஆரம்ப ஓவர்களை மேற்கொள்வர் ஆனால், இந்தியாவுடனான போட்டியில் மெக்ராத்தும், பிரெட்லீயும் ஆரம்ப ஓவர்களை வீசினர். இது குறித்து பொன்டிங் கூறுகையில்:-

"எமது அணியின் பந்து வீச்சு வரிசை தேவைக்கேற்ப மாற்றக்கூடியதாக இருப்பது முக்கிய விடயம். வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு விதமாக இதை நாம் பயன்படுத்தியுள்ளோம்.

"பிரெட்லீ மூலம் முன்வரிசை விக்கெட்டுகளை தகர்ப்பது எனது நோக்கமாக இருந்தது. அதை பிரெட்லீ நிறைவேற்றினார்.

" அதன் பின் மெக்ராத் தொடர்ச்சியாக சில ஓட்டமற்ற ஓவர்களை வீசினார். ஜிலெஸ்பி பந்துவீச ஆரம்பித்த பின் இந்திய அணியினரை முற்றாக நெருக்கடிக்குள்ளாக்கி விட்டோம்."

\- இவ்வாறு பொன்டிங் கூறினார்.

(ம)

## இங்கிலாந்து....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)
கள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது நெதர்லாந்து.

பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்து அணி 23.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மட்டுமிழந்து 144 ஓட்டங்களைப்பெற்றது. 6 விக்கெட்டுக்களால் வென்றது.

10 ஓவர்கள் வீசி 25 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்திய இங்கிலாந்து வீரர் அண்டர்ஸன் ஆட்டநாயகன்.

(ம)

## ஏன் இப்படி....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)
மேற்கண்டவாறு தெரிவித்தார். "நாங்கள் இப்படித் தொடர்ந்து ஆடிவந்தால் என்னபதில் கூற முடியும்?" என்று நம்பிக்கையீனத்துடன் எதிர்க் கேள்வி கேட்டார் கங்குலி.

"உங்கள் கேள்விகளுக்கு என்னிடம் பதிலேதும் இல்லை. எப்படியாவது நிறைய ஓட்டங்களை குவித்தாக வேண்டும். இல்லையேல் முன்னேறுவது மிகக்கடினம்" என்றும் கங்குலி சொன்னார்.

(ம)


லக்ஷ்மி இணுவில்
இன்றுமுதல்
நடித்த
உல்லாசம்
தினசரி 11.00, 3.00 ,7.00 (பு.நே.)

நிரஞ்சனாஸ் சங்கானை
பிரசாந், சிம்ரன் நடித்த
ஜோதி
சா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

நாகலக்ஸ் சுன்னாகம்
இன்றுமுதல்
மாதவன், மீராஜஸ்மின், ரகுவரன், சார்லி
நடித்த
ரன்
காட்சிகள் தினசரி: 11.00, 3.00, 6.30 (பு.நே.)
(14568)

ராஜா யாழ்ப்பாணம்
ஆவது வாரம்
விஜய், சினேகா,
வசீகரா
THE MUMMY RETURNS
இரவு 9.10 மட்டும்


**பணக்கொடுக்கல் வாங்கல்:**

# வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் 5பேர் வாள்வெட்டுக்கு இலக்காகினர்

## சாவகச்சேரி உப்புக்கேணியில் சம்பவம்

தென்மராட்சி,பெப்.17
பணக் கொடுக்கல் வாங்கல் பிரசினை காரணமாக எழுந்த வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறி இரும்புக் கம்பிகள், கொட்டன்கள், கத்திகள் பாவிக்கப்பட்டதால் ஐந்துபேர் வெட்டுக் காயங்களுக்கு இலக்கான சம்பவம் சாவகச்சேரி - கச்சாய் வீதி உப்புக் கேணிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த வீரசிங்கம் தர்மேந்திரன் (வயது34), இவரது தாயார் வீரசிங்கம் தில்லைநாயகி (வயது 54), சின்னத்தம்பி ரேணுகாதேவி (வயது31), கிருஷ்ணநாதன் வரதுங்கன் (வயது20), இவரது தந்தை ந.கிருஷ்ணநாதன் (வயது46) ஆகியோரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் இவர்களில் வீ.தர்மேந்திரன், சி.ரேணுகாதேவி, கி.வரதுங்கன் ஆகியோர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக இப்பகுதியைச் சேர்ந்த ஐந்துபேர் சாவகச்சேரி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிவானின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(எ-117-10)

# ஆசிய வங்கி பிரதிநிதி மட்டு. விஜயம்

கொக்கட்டிச்சோலை,பெப்.17
ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஜோன் ஆர் கூனி கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்தார்.

வடக்கு - கிழக்கு சமூக மீளாய்வுத் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்களைப் பார்வையிடுவதும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்களைப் பற்றி ஆராய்வதுமே தமது விஜயத்தின் நோக்கமென அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வாகரைக்குச்சென்று யுத்தத்தினால் அழிந்துபோன வாகரை வைத்தியசாலையின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை அவர் நாட்டி வைத்தார். இந்த வைபவத்தில் அவர் உரையாற்றுகையில் யுத்தத்தில் அழிந்து போனவற்றின் புனரமைப்புப் பணிகள் கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன், நிர்வாகப் பொறுப்பாளர் றெஜினோல்ட், ஆண்டான் குளம் இராணுவப் பொறுப்பாளர் ரெஜி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் கலாநிதி எம்.முருகானந்தம், மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கிருஷ்ணபிள்ளை உட்பட பலரும் வைபவத்தில் கலந்துகொண்டனர்.

(ஐ)

## நமீபியா....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)
தான் வென்றது.

நாணயச்சுழற்சியில வென்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடியது. 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 255 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு களமிறங்கிய நமீபிய அணியை வஸீம் அக்ரம் தனது வேகத்தால் துவம்சம் செய்தார். 84 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 17.4 ஓவர்களில் சுருண்டது நமீபியா. 171 ஓட்டங்களால் பாகிஸ்தான் வென்றது. 9 ஓவர்கள் வீசி 28 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்திய வஸீம் அக்ரம் ஆட்டநாயகன்.

(ம)

# மரண அறிவித்தல்கள்

## தில்லையம்பலம் திருநாவுக்கரசு

(இரத்தினம்)

புளியங்கூடலைச் சேர்ந்த தில்லையம்பலம் திருநாவுக்கரசு (இரத்தினம்) அவர்கள் நேற்று (16.02.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் செல்லையா - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் கண்ணம்மாவின் (கிளி) பாசமிகு கணவரும் சந்திரா, ஆனந்தரூபன், இந்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவபாதம் (பாலு), பவானந்தராணி, வேல்வேந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பரமலிங்கம், பொன்னம்மா, வைத்தலிங்கம், அப்பாத்துரை, செல்லம்மா மற்றும் இராசையா (ஆசிரியர், ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.02.2003) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*8ஆம் வட்டாரம்,*
*புளியங்கூடல்,*
*வேலணை.*

தகவல்:
தி.ஆனந்தம் (மகன்).

(14620)

## கணபதிப்பிள்ளை வல்லிபுரம்

வாதரவத்தை, புத்தூரைப் பிறப்பிடமாகவும் கேணியடி, திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை வல்லிபுரம் நேற்று (16.02.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னத்தங்கம் அவர்களின் மகனும் சின்னத்தம்பி - சின்னாச்சிப்பிள்ளையின் மருமகனும் காலஞ்சென்ற சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, தங்கமுத்து, அன்னப்பிள்ளை, சிவக்கொழுந்து, இளையபிள்ளை, ஐயாத்துரை, தம்பு, அருளம்பலம் ஆகியோரின் சகோதரரும் விஸ்வலிங்கம், பாலசிங்கம்(கனடா), அழகதுரை (யாழ்.பல்கலைக்கழகம் , அரசறிவியல் - சமூகவியல்துறை), சிவலிங்கம் (வலி.கிழக்கு பிரதேச சபை, உரும்பிராய்) ஆகியோரின் அன்புத் தந்தையும மனோன்மணி, சிரோனமணி, இராசமலர், அமிர்தராணி ஆகியோரின் மாமனாரும் கமலநாதன் (ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை) பா.சற்குணலீலா, நா.வசந்தலீலா, இ.நவீனகுமாரி, ரஞ்சிதமனோகரன், விஜயரூபன், சுபாஜினி, சயேந்திரன் (கனடா), ஜாமினி (கனடா), கஜன்(கனடா), காலஞ்சென்ற சசிகுமார் மற்றும் சசிரூபன் (யாழ்.பல்கலைக்கழகம், பௌதிகவியல்துறை), பிரபாகரன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், நல்லூர்), றஜீவ், பிரகாஷ், றஜீவன் (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்), றஜீதா, சுஜீபா(யாழ் பல்கலைக்கழகம்), உமாஜினி, ஷகிலா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2003) திங்கட்கிழமை பி.ப.2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*கேணியடி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*திருநெல்வேலி.*

தகவல:
வ.அழகதுரை (மகன்).

(14619)

# இடுப்புப்பட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) டிப்பாகக் கடைப்பிடிக்குமாறு அலோசனை கூறுவர்.

● இந்த நடைமுறை இராணுவ உடைப்பட்டிகளுக்கு மட்டுமே பொருந்தும். அதனால், பொதுமக்கள் அணியும் எந்தவிதமான பட்டிகளையும் புலிகள் அணிந்துகொண்டு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்லலாம்; அங்கே தங்கியிருக்கலாம்.

12ஆம் திகதி புலிகள் இயக்கப் பெண் போராளிகள் அணிந்திருந்த பட்டி, பெண் போராளிகளின் சீருடைக் குரியபட்டிகள். அவற்றை அணிந்து சென்றது யுத்தநிறுத்த மீறல் சம்பவம்.

பட்டிகளை வலுக்கட்டாயமாக அகற்றுவதற்கு இராணுவத்தினர் முனைந்தும், அதனால் பதற்றம் ஏற்படவே புலிகளின் தூண்டுதலில் ஆர்ப்பாட்டம் நடந்தது. அதை நசுக்குவதற்கு வந்த கலகம் அடக்கும் படையினர் அப்பாவிப் பொதுமக்களைக் கூட அடித்துக் கலைத்தனர். இதுவும் யுத்தநிறுத்த மீறல் சம்பவம்தான் என்கின்றது கண்காணிப்புக்குழு.

## World Cup Score card - 2003



ரூ. 16910 முதல் தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல. 1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:021-222 5408


நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

ஆட்டநாயகன்: பிளமிங்

முடிவு: 9 விக்கெட்டுக்களால் நியூஸிலாந்து வெற்றி (டக்வோர்த் – லூயிஸ் முறை)

### தென்னாபிரிக்கா

துடுப்பாட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஜி.சி.சிமித் | c/மக்குலம் | b/பொண்ட் | .... | 23 |
| எச்.கிப்ஸ் | c/மக்மிலன் | b/ஓராம் | .... | 143 |
| என்.போஜே | | b/டைரிஸ் | .... | 29 |
| ஜே.எச்.கலிஸ் | c/வின்சன்ற் | b/விற்றோரி | .... | 33 |
| எம்.பௌச்சர் | c/கெய்ன்ஸ் | b/ஓராம் | .... | 10 |
| எல்.குளுஸ்னர் | not out | | .... | 33 |
| எஸ்.எம்.பொலக் | c/ஓராம் | b/அடம்ஸ் | .... | 10 |
| ஜி.கேர்ஸ்டன் | not out | | .... | 05 |
| களமிறங்காதோர்: எச்.டிப்பென்னர், எம்.நிற்னி, ஏ.டொனால்ட் | | | | |
| உதிரிகள் | | | .... | 20 |
| மொத்தம் | (50 ஓவர்கள்) | | .... | 306/6 |

பந்துவீச்சு

பொண்ட்: 10-0-73-1, அடம்ஸ்: 9-0-57-1, ஓராம்: 8-0-52-2, டைரிஸ்: 10-0-44-1, விற்றோரி: 10-0-58-1 ஆஸ்லே: 3-0-16-0

### நியூஸிலாந்து

துடுப்பாட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| பிமக்குலம் | c/பௌச்சர் | b/டொனால்ட் | .... | 25 |
| பி.பிளமிங் | not out | | .... | 134 |
| என்.ஜே.ஆஸ்லே | not out | | .... | 54 |
| உதிரிகள் | | | .... | 16 |
| மொத்தம் | (36.5 ஓவர்கள்) | | ... | 229/1 |

களமிறங்காதோர்: எஸ்.பி.டைரிஸ், சி.எல்.ஹெயன்ஸ், டி.எல்.விற்றோரி, எஸ்.வின்சென்ட், சி.சற்.ஹரிஸ், ஏ.ஆர்.அடம்ஸ்

பந்துவீச்சு

பொலக்: 8-0-36-0, நிற்னி: 8-1-32-0, டொனால்ட்: 5.5-0-52-1, கலிஸ்: 8-0-47-0, போஜே: 2-0-16-0, குளுஸ்னர்: 5-0-37-0

*(ஆட்டத்தின் 30.3 ஆவது ஓவரில் மழை குறுக்கிட்டது. அப்போது நியூஸிலாந்து அணி 182 ஓட்டங்களைப்பெற்றிருந்தது. ஆட்டம் மீண்டும் ஆரம்பித்தபோது டக்வோர்த் லூயிஸ் முறைப்படி, 39 ஓவர்களில் 226 ஓட்டங்களை பெற வேண்டும் என்றும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதாவது மேலும் 51 பந்துகளில் 44 ஓட்டங்களைப் பெறவேண்டும்.)*


காணி தேவை

யாழ்ப்பாணத்தில் வர்த்தக நடவடிக்கையினை விரிவாக்கும் நோக்கில் உள்ள பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றுக்கு 5 பரப்பிற்கு மேல் வெற்றுக்காணி தேவை.

மின்சார நிலைய வீதி, ஆஸ்பத்திரி வீதி, யாழ் பிரதான வீதி, கே.கே.எஸ் வீதி ஆகிய இடங்கள் விரும்பத்தக்கது.

கீழ்காணும் முகவரிக்கு முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

S.SOMASKANTHAN
15-58, CRESCAT RESIDENCIES
NO: 75, Galle Road,
Colombo-03.

இந்திய சாஸ்திரியார் வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ் பெற்ற
S.N.குமாரசாமி அவர்கள்.

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.

(காலை 8மணி முதல் மாலை 5மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்

இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ்-இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)

✪ செவ்வாய் விடுமுறை. (14467)


## புலிகளின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) னர் என்பது தெளிவாகின்றது. இது சமாதான உடன்படிக்கைக்கு முற்றிலும் எதிரான செயலாகும். முன்னர் ஒரு தடவை இவ்வாறு இராணுவத்தினர் எமது பகுதிக்குள் பிரவேசித்து பெண் போராளிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்த சம்பவத்தையும் இங்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்வது சமாதானத்தின்பால் தமிழ் மக்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இருக்கும் நம்பிக்கையையும் ஈடுபாட்டையும் சிதைத்துவிடும். எனவே இனிமேலாவது இவ்வாறான சம்பவங்கள் நிகழாமல் சம்பந்தப்பட்ட தரப்பினர் அக்கறையோடு செயற்பட்டு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நெருக்கடியைத் தவிர்க்கவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

- இவ்வாறு கேணல் தீபன் தெரிவித்திருக்கிறார். (ஐ)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) படையினர் நாட்டின் பல இடங்களில் தற்பொழுது பயிற்றுவிக்கப்படுகின்றனர் எனவும் இத்திட்டத்தின் கீழேயே அமெரிக்கா - இலங்கை கூட்டு யுத்தப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிவிக்கப்படுவதாக கொழும்பில் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இந்திய யுத்த ஆலோசகர்கள் பலர் இலங்கை அரசாங்கத்துக்கு பாதுகாப்புத் தொடர்பான ஆலோசனைகள் வழங்க இலங்கைக்கு வந்திருக்கின்றனர். அவர்களின் ஆலோசனையின் பேரில் முதலில் பாதுகாப்பு உளவுப் பிரிவும் இரண்டாவதாக விசேட அதிரடிப்படையும் புனரமைப்புச் செய்யப்படவிருக்கின்றன.

கடந்தவாரம் இலங்கைக்கு வருகை தந்த இந்திய தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் முன்னாள் பணிப்பாளர், பிரதமரின் பாதுகாப்புப் பிரிவையும், அமைச்சர்கள் பாது காப்பு பிரிவையும இணைத்து புதிய பாதுகாப்புப் பிரிவு ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுப்பார் என்று கூறப்படுகிறது.

நெருக்கடிக் காலத்தில் உதவுவது பற்றி இந்திய விமானப்படைத் தளபதி - அரசுத் தலைவர்களுடன் பேச்சு நடத்தியிருக்கிறார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

## பலியான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) னர் சடலத்தை இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைத்தது

சாவகச்சேரி மாவட்ட நீதிவான் அரியநாயகம் நேற்றுமாலை முகமாலையில் வைத்து சடலத்தை பார்வையிட்டார். சடலத்தை பிரேத பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு சட்டவைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணை, சாவகச்சேரி நீதிமன்றத்தில் நாளைமறுதினம் நடைபெறும்.

சடலத்தின் வயிற்றுப் பகுதியிலும் தலையிலும் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

சடலம் நேற்று பலாலிக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து விமானத்தில் கொழும்புக்கு அனுப்பப்பட இருந்தது. (ஐ-10)

## கிளாலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அவர் துப்பாக்கியுடனும் 30 ரவைகள் கொண்ட மகசீனுடனும் காணாமற் போயிருப்பது தெரியவந்தது.

அந்த இராணுவ வீரர் தேடப்பட்டதையடுத்து கடந்த 14ஆம் திகதி 12.45 மணியளவில் அவர் காணாமற் போனது குறித்து கொடிகாமம் பொலீஸில் முறையிடப்பட்டது.

நேற்றுமுன்தினமிரவு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, யாழ்ப்பாணம் இராணுவத் தலைமையகத்துக்கு கொடுத்த தகவலில், முன்னரங்கப் பகுதியிலிருந்து முன்னேறிச் சென்ற மூன்று இராணுவத்தினர்மீது புலி உறுப்பினர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டிருக்கின்றனர் எனவும் அதில் ஒருவர் மரணமானார் எனவும் தெரிவித்திருக்கின்றனர். புலிகள் உறுப்பினர்கள்மீது அவர் கைக்குண்டை எறிய முற்பட்ட வேளையிலேயே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவச் சிப்பாய்கள் மூவர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புகுந்தனர் என்ற குற்றச்சாட்டை இராணுவம் நிராகரித்திருக்கிறது. இச் சம்பவம் குறித்து இராணுவப் பொலீஸார் விசாரணைகள் நடத்தி வருகின்றனர். (ஐ)

# பெண் புலிகள் கைதானதை எதிர்த்து இன்று திருமலையில் பூரணஹர்த்தால்

திருகோணமலை,பெப்.17

திருகோணமலையில் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது. திருகோணமலை வெகுஜன அமைப்பு இதனை ஏற்பாடு செய்திருக்கிறது.

இது தொடர்பாக வெளியிட்டிருக்கும் ஒரு துண்டுப் பிரசுரத்தில் அரசாங்கத்துக்குள் இருக்கும் தீயசக்திகளின் செயற்பாட்டால் கடந்த வெள்ளிக்கிழமை அரசியல் பணிக்காக சாம்பல் தீவுக்குச் சென்ற இரண்டு பெண் போராளிகள் கைது செய்யப்பட்டனர். இதனால், மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் சமாதானம் குழம்பி விடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது. இந்நிலை தொடராமல் இருக்க மக்களாகிய நாங்கள் இன்று பூரண ஹர்த்தாலுடன் கடை அடைப்பும் மேற்கொள்வோம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நிலாவெளி, கோபாலபுரத்தில் கட்டப்பட்ட நினைவுத் தூபியை கடற்படையினர் திறக்க விடாது முற்றுகையிட்டுள்ளதற்கும் மானிப்பாய் பெண் போராளிகள் தாக்கப்பட்டதற்கும் இந்த ஹர்த்தாலில் கண்டனம் தெரிவிக்கப்படும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

அமைதியான முறையில் அனைத்து வேலைத்தளங்களையும், வியாபார ஸ்தாபனங்களையும் மூடி ஹர்த்தாலை அனுஷ்டிக்கும்படி துண்டுப்பிரசுரத்தில் கேட்கப்பட்டுள்ளது.

இன்றைய ஹர்த்தால் காரணமாக நேற்று சந்தைகள், கடைத்தெருக்களில் சனக்கூட்டம் நிறைந்து காணப்பட்டது. விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைய வந்த இரு சிறுமிகளை அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்க கடந்த வெள்ளியன்று திருமலைக்கு கூட்டிச்செல்லும் வழியில் இரு பெண் போராளிகளும் உப்புவெளியில் வைத்து பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

திருமலை நீதிமன்றில் ஆஜர் செயயப்பட்ட அவர்கள் இருவரும் எதிர் வரும் 27ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# பத்திரிகைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையிலிருந்து வெளிவரும் சில தமிழ்த் தேசியப் பத்திரிகைகள் பக்க சார்பானதும் - இந்தியா மீது விசமத்தனமான நம்பகமற்ற வகையில் - செய்திகளை பிரசுரிக்கின்றன. இவை எவ்வளவு பிரயத்தனம் செய்தாலும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவைத் துண்டித்து விடமுடியாது.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களை இந்தியா மறந்துவிட்டது. இந்திய வம்சாவளி மக்கள் மீது அக்கறை கொள்ளவில்லை. தூரவிலகிச் செல்கின்றது என்று குற்றம் சாட்டுவதில் எந்தவிதமான உண்மையும் இல்லை. இங்கு வாழும் தமிழர்கள் இந்தியாவிலிருந்து வந்தவர்கள். இந்தியா, இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களின் தாய்.

அன்று பாரதியார் 'சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்' என்றார். இன்று இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதனை செயற்படுத்தி தரைவழித் தொடர்பையும் ஏற்படுத்துவதில் வெற்றிகண்டுள்ளார்.

இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களின் நன்மைக்காகவும், மறுக்கப்பட்ட உரிமைகளுக்காகவும் இ.தொ.கா. பெரும் தொண்டாற்றி வருகிறது. ஆனால், சில தீயசக்திகள் அமைதியாக இருக்கும் மலையகத்தில் மாற்று சக்திகளை ஊடுருவச் செய்ய முனைகின்றன. அவற்றிற்கு உடந்தையாகவும் இருக்கின்றன. இப்படியான தீய சக்திகளுக்குத் துணை போகக் கூடாது.

இந்தியா, இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், கல்வி, கலாசாரம், அடிப்படை சுகாதார வசதிகள் என்பவற்றை அபிவிருத்தி செய்யவும் பல்வேறு உதவிகளை வழங்கி வந்துள்ளது.

தென்பகுதி பெரும்பான்மை இன அரசியல்வாதிகள் மலையகத்தில் உழைக்கும் தொழிலாளர்கள் மீது அக்கறை கொண்டு நேசக்கரம் நீட்டுகின்றனர். இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிடக் கூடாது. அவற்றைப் பற்றிப் பிடித்து நமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தினார். (ஐ)


வல்வெட்டியில்... தூபி வீதியில்...
!இணைய சேவைப் பூங்கா!
T.P: 021 226 3327 T.P: 0094 21 226 3327
E-mail: isp242002@yahoo.com
ISP COMMUNICATION
CABLE LINE மூலம் துரிதமாக
இன்ரர்நெற் மற்றும்
உள்நாட்டு
வெளிநாட்டு
தொலைத் தொடர்பு சேவையினை
பெற்றுக்கொள்ளலாம்.
✪ மற்றும்
கம்ப்யூட்டர் பிறின்ரிங் & றோணியோ வேலைகள்
செய்து கொடுக்கப்படும்.
இன்ரர்நெற் அழைப்பு 25/=, 30/=
உள்வரும் அழைப்பு 2/=
உள்நாட்டு அழைப்பு 8/=

தென்னிந்தியாவில் இருந்து

முதன்முறையாக யாழ்ப்பாணம் என்னும்
புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ள
பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற
சிவபால ஜோதிடர்
ராஜகுருசாமி அவர்கள்
★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்
இவற்றில் பலவருட அனுபவமும் புகழும் பெற்றவர்
✻ நேரம் - காலை 9.00 - மாலை 5.00 மணிவரை.
ராஜகுருசாமி
மிலேனியம் மல்ரி கொம்பிளக்ஸ்
60/1 (112), TEMPLE ROAD [Near ICRC], JAFFNA.
(14557)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.02.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.